
ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

22-02-2006 - மலர் 02, இதழ் 27





## பல்காலிப் பூச்சி



## கணினியும் பழமையும்



விலை ரூபா: 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முக அறிவுசார் வாரப்பத்திரிகை



# இலக்கியச் சோலை

தயாரிப்பு - நவசீலன்

# துணிச்சலின் விளைவு

ஒட்டக்கூத்தர் இப்படிப்பட்ட வீரதீரக் கதைகளையும் செங்குந்தர்கள் வாழ்வில் நடந்த பல சாகஸக் கதைகளையும் கூறிய பின்னர் அவர்களுக்கும் துணிச்சல் ஏற்படலாயிற்று. அவர்கள் எல்லோரும் ஒரு மனதாகச் சம்மதித்தனர்.

"இனிக் காலதாமதமில்லாமல் பிரபந்தத்தை ஆரம்பிக்கலாம். உங்கள் கட்டளைப்படி தலைகொடுக்கச் சித்தமாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

ஒட்டக்கூத்தர் அதற்கு, "பிரபந்தத்தை ஆரம்பிக்கச் சொல்கிறீர்களே! அதெப்படி? தகுதியான ஸ்தானத்திலிருந்தல்லவோ ஆரம்பிக்க வேண்டும்?" என்று கேட்டார். அதற்குச் செங்குந்தர்கள், 'ஸ்ரீரங்கத்தில் ஆயிரங்கால் மண்டபம் இருக்கிறதே. அது விசாலமானதாகையால் தகுதியான ஸ்தானம் அதைவிட வேறில்லை. அந்த இடத்தில் அழகிய பொற்பீடம் கொண்டு வந்து போடுகிறோம். அதன் மேலிருந்து ஆரம்பிக்கலாம்' என்று கூறினார்கள்.

ஒட்டக்கூத்தர் அதற்கு, "நாம் குறித்த ஸ்தானம் அதுவல்ல. பின்னர் உங்களுக்கே தெரியவரும்" என்று கூறினார்.

"அப்படியானால் உங்கள் விருப்பப்படியே செய்வோம். நாங்கள் தலை கொடுப்பதற்குச் சிறிதளவும் தடையில்லை" என்று கூறினார்கள் செங்குந்தர்கள்.

பின்னர் சோழ நாட்டில் பிரதான நகரங்களிலும், சுற்றுப்புறங்களிலும் மற்ற ஊர்களிலும் இருக்கும் தங்கள் சாதியினர்க்கெல்லாம், இந்த விஷயத்தையும், தம் முன்னோர் சரித்திரங்களையும் விபரமாக எழுதி அவர்களின் பெயர்களையும், வீரப் பிரதாபங்களையும் ஒழிந்து போகாமல் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்னும் எண்ணம் உள்ளவர்கள் எவரோ அவர்கள் மாத்திரம் இதற்கு உடன்படலாம் என்றும் குறித்து அனுப்பினார்கள்.

அச்செய்தி கேட்ட செங்குந்தர்கள் எல்லோரும் "தம் குலத்திற்குக் கீர்த்தியை வருவிக்கின்றவர்கள் அல்லவா உத்தமர்கள்" என்று கருதி உற்சாகம் மேலிட்டுத் தாம் தாம் இருந்த இடங்களிலேயே தங்கள் தங்கள் தலைகளை இளநீர் வெட்டுவது போல் மிகவும் அலட்சியமாக வெட்டி எறிந்தார்கள்.

அவர்கள் தத்தம் தொழில்களைச் செய்து கொண்டிருந்தபொழுதே இந்தச் செய்தியைக் கேட்டுத் தம் தலைகளைத் துண்டித்தெறிந்த படியால் அப்படியே சற்று நேரம் மட்டும் அவர்களின் முண்டங்களில் சில, பாவோதி கொண்டும், சில பா புனைந்து கொண்டும், சில தறி நெய்து கொண்டும் இருந்து, பிறகு தொட்டுத் தொட்டென்று ஆங்காங்கே விழுந்துவிட்டன.

ஒட்டக்கூத்தர் கேட்டது எழுபது தலைகள் மாத்திரமே. ஆனால் அறுபட்டு விழுந்ததோ அநேக தலைகள். வெட்டுண்டவர்கள் தவிர மற்றவர்கள் அத்தலைகளையெல்லாம் பெரிய பெரிய கூடைகளில் அள்ளிப் போட்டு வண்டிகளில் ஏற்றி அடுக்கிக் கொண்டு போய் ஒட்டக்கூத்தரின் தலைவாசலில் குவித்தார்கள்.

(தொடரும்)




# ஏன்? எப்படி?

✱✱ ஆகாய விமானங்களின் வெளிப்புறப் பகுதிகள் அலுமினியத் தகடுகளாலேயே செய்யப்படுகின்றன. எனினும், கப்பல்களோ அவ்வாறு அலுமினியத்தினால் தயாரிக்கப்படுவதில்லை. இதற்கான காரணம் என்ன?

விமானமானது அதன் சுமையை தாங்குவதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லாத நிலையிலேயே வானில் பறக்கின்றது. எனவே, அதன் எடை குறையும் அளவிற்கு அதன் பயணத்திற்கு அது வசதியாக அமையும். ஆனால் கப்பல்களோ அவ்வாறில்லை. கடலில் பயணிக்கும் போது ஆழ்கடலில் பாரிய கற்பாறைகள், பாரிய மீன்களில் மோதிக் கப்பலுக்குச் சேதங்கள் நேரலாம். எனவே, கப்பலின் வெளிப்புறக் கட்டுமானம் அலுமினியத்தினால் செய்யப்பட்டிருந்தால் அது பாரிய சேதமாக அமைந்து விடலாம். இந்தக் காரணத்தினாலேயே கப்பல்களின் வெளிப்பகுதிகள் அலுமினியத்தினால் தயாரிக்கப்படுவதில்லை.

✱✱ சிலர் இறைச்சியை விடச் சோயா அவரையை விரும்பிச் சாப்பிடுவதன் காரணம் என்ன?



இறைச்சி, மீன் ஆகியவற்றில் உள்ளது போலவே சோயாவிலும் புரதச் சத்து உள்ளது. ஆனால் இறைச்சியை சாப்பிட்டாலோ புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. அது மட்டுமன்றி இறைச்சியில் 'கொலஸ்ட்ரோலும்' அதிகமாக இருப்பதனால் இருதயக் கோளாறுகள் ஏற்படுவதற்கும் சாத்தியங்கள் உள்ளன. எனவேதான், சோயா அவரையைச் சாப்பிட்டு புரதச் சத்தைப் பெற்றுக் கொள்வதில் சிலர் ஆர்வம் கொள்கின்றனர்.

# இளம் செய்தியாளர்

'விஜய்' அறிமுகப்படுத்தவிருக்கும் இளம் செய்தியாளர் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏராளமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. செய்தியாளராகத் தெரிவுசெய்யப்படுவோர் பற்றிய விபரங்களும், அவர்களின் புகைப்படங்களும் விரைவில் வெளியிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றவரைப் பின் தள்ளி முன்னால் ஓடும் போது........

'பொறுத்தார் பூமியாழ்வார்', 'பொறுமை கடலிலும் பெரியது' ஆகிய முதுமொழிகள் எமது முன்னோர் எமக்களித்த மிகப் பெரிய தத்துவங்கள் என்பதைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. வாழ்வின் அநேகமான சந்தர்ப்பங்களில் பொறுமை காத்தலால் மட்டுமே பல்வேறு பிரச்சினைகளில் இருந்தும் மிக இலகுவில் நம்மால் விடுபட முடியும் என்பதைப் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இன்று நாம் மிகவும் வேகமாக இயங்கும் ஓர் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆதலினால் நமது சிந்தனைகள், செயல்கள், என்பனவும் மிகுந்த வேகத்திலேயே இடம் பெற வேண்டியுள்ளது. நமது வாழ்வு எனும் ஓட்டப் பந்தயத்தில் பலரையும் பின் தள்ளி விட்டு முன்னால் ஓட வேண்டியுள்ளது. அத்தகைய ஓட்டத்தின் போது ஏனையோரின் ஓட்ட எல்லைக்குள்ளும் பிரவேசிக்க வேண்டியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஓட்ட வீரர்கள் ஒருவரையொருவர் மோதிக் கொள்வது போல் நாமும் மோதிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதனால் பாதகமான விளைவுகள் ஏற்பட்டு நம் முன்னேற்றத்தைப் பாதிக்காமல் இருக்கும் பொருட்டு நாம் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

Vijey விஜய

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

பொறுமையும், நிதானமும் மனிதனிடம் காணப்பட வேண்டிய மிக உயரிய குணங்களாகக் கருதப்படுகின்றன. ஆணவமும், கர்வமும் இக்குணங்களுக்கு எதிரான குணாம்சங்களாகக் காணப்படுகின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களினும் பொறுமையும், நிதானமும் கொண்டவர்கள் பாராட்டப்படுவதுடன் ஆணவமும் கர்வமும் கொண்டவர்கள், வேண்டாதவர்களாக ஒதுக்கப்படுகின்றனர். அதன் காரணமாகப் பொறுமையும் நிதானமும் கொண்டவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவதுடன் ஆணவமும் கர்வமும் கொண்டவர்கள் தோல்வியடைகின்றனர்.

கூர்ப்பும், பரிணாம வளர்ச்சியும் மிகச் சிக்கலான, புரிந்து கொள்ளக் கடினமான இரண்டு தத்துவங்கள். இத்தத்துவங்களின் படி மனித இனம், ஏனைய உயிரினங்கள், தாவரங்கள், நுண்ணுயிரினம் ஆகிய சகலதும் வாழ்வுக்கு மிக உகந்த விதத்தில் வைக்கப்பட்டுள்ளன. நமது சிந்தனை, செயல் என்பன, மூளை என்ற மிக நுணுக்கமான உடற்பாகத்தால் தீர்மானிக்கப் படுகின்றது. கூர்ப்பின் அற்புதமான ஓர் உருவாக்கம் இது. வேகம், தாமதம், வன்முறை, சாந்தம், நுண்கலை, இசை, ஓவியம் இவை தொடர்பான விருப்பு வெறுப்பு என்பவற்றுக்கெல்லாம் மூளையே காரணகர்த்தா! மூளைக்குப் பயிற்சி கொடுத்து உகந்த விதத்தில் பக்குவப்படுத்திக் கொள்வதன் மூலம் நாம் பல சாதனைகளைச் செய்ய முடியும்.

நுண்கலைகளான ஓவியம், சிற்பக்கலை, சங்கீதம், நடனம், நாட்டியம் இன்ன பிறகலைகள் என்பன மனிதனுக்குப் பொறுமை என்ற நற்குணத்தைக் கற்றுத் தருகின்றன. ஆகவேதான், நாம் இக்கலைகளைக் கற்க வேண்டியவர்களாகிறோம். பெண்கள் பொறுமைசாலிகளாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம் முன்னோர் அவர்களுக்கு நாட்டியம், சங்கீதம், தையற்கலை ஆகியவற்றைக் கற்கச் சொன்னார்கள். நாம் நம்மை எல்லா வகைகளிலும் பொறுமை காப்போராகப் பார்த்துக் கொண்டால் எமது வாழ்வை வெற்றி பெறச் செய்யலாம்.

## பாடசாலை மாணவர்களுக்காக இராணுவப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்குடா நாட்டில் இயங்குகின்ற பாடசாலைகள், ஆரம்பிக்கும் போதும் முடியவடையும் போதும் இராணுவ வாகனங்களின் போக்குவரத்தினால் ஏற்படுகின்ற சிரமங்கள் குறித்து, யாழ் மாவட்ட இராணுவத் தளபதிக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இதற்குத் தீர்வு காணுமுகமாகப் பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களில் இராணுவ வாகனங்களின் போக்குவரத்தைக் குறைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டே இராணுவத் தளபதி மேற்படி முடிவினை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, பாடசாலை



முடிவடையும் போது ஏ9 பாதையை மட்டும் இராணுவத்தினர் உபயோகிப்பதற்கும், ஏனைய குறுக்கு வீதிகளில் இராணுவத்தினரின் போக்குவரத்தினைக் குறைப்பதற்கும் இராணுவத் தளபதி இணங்கியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், மனித உரிமைகள் ஆணைக்குழு இணை அதிகாரி ஆகியோர், யாழ் மாவட்ட இராணுவத் தளபதியையும், வட பிராந்தியப் பிரதி பொலிஸ் மா அதிபரையும் பலாலியில் சந்தித்தபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்படுவது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## 2500 தமிழ்மொழி மூலப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

இவ்வருடத்தில் 10,000 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த, இவ்வெண்ணிக்கையில் 2500 பட்டதாரிகள் தமிழ் மொழி மூலப் பட்டதாரிகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் தொடர்பான விண்ணப்பங்களைக் கோருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் மார்ச் மாதமளவில் வெளியாகும் என்று, கல்வியமைச்சர், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவிடம் தெரிவித்துள்ளதாகவும், விண்ணப்பங்கள் கோரப்பட்டு நியமனம் வழங்கும் போது ஏற்கனவே விண்ணப்பித்து நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வேறு திணைக்களங்களில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் மீண்டும் ஆசிரியர்களாகத் தொழில் புரிய விரும்பினால், அது குறித்தும் தாம் சாதகமாகவே முடிவெடுப்போம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பல வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டு அவற்றுக்கும் பதிலளித்த கல்வி அமைச்சர், பாடசாலையில் தற்போது நிகழ்ச்சித் திட்ட உதவி ஆணையாளர், நிதி உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளில் பணி புரிகின்ற அனைத்துப் பட்டதாரிகளுக்கும், ஆசிரியர் நியமனம் வழங்குவதற்குரிய கோரிக்கையை அமைச்சரவைக்கும் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற முயற்சிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

### வாசகர் அறிவுப் போட்டி

வாசகர்களே! இம்மாதம் (பெப்ரவரி) 1ஆம், 8ஆம், 15ஆம், 22 ஆம் திகதி "விஜய்" இதழ்களை உன்னிப்பாக வாசிப்பதுடன் அவற்றை பாதுகாத்தும் வையுங்கள். இந்த இதழ்களில் உள்ள விடயங்களில் இருந்து வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்குச் சரியான விடையளிக்கும் 3 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பெறுமதிமிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V.Games) பரிசுகளாக வழங்கப்படும்.

* போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் வினாக்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
* நான்கு மாதங்களுக்கொருமுறை மாபெரும் பரிசுக் குலுக்கல் மூலம் மேலும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு உயர் பெறுமதியிலான பரிசுகள் வழங்கப் படும்.

வாசகர்களே போட்டியில் பங்குகொள்ளத் தயாராகுங்கள்

## பாடத்திட்டத்தில் சட்டமும் உள்ளடக்கப்பட வேண்டும்

இன்றைய காலகட்டத்தில் மாணவ சமுதாயம் சட்டம் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம் எனக் கல்விமான்களும் சமூக ஆர்வலர்களும் சட்டத்துறை அதிகாரிகளும் எதிர்பார்க்கின்றார்கள்.

அண்மையில் இரத்தினபுரி நீதிமன்ற வளாகத்தில், சட்ட உதவிக் குழுவின் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசிய இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி என்.பி.கருணாதிலக மேற்படி விடயம் குறித்து வலியுறுத்தியிருந்தார்.

வழக்கிற்கு ஆஜராகும் சட்டத்தரணிக்குப் பணம் வழங்க முடியாத நிலைமையும், தமது வழக்கினை வெற்றி பெறச் செய்யக் கூடிய சட்டத்தரணி ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாத அனுபவமற்றவர்களுமாகச் சமூகத்தில் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

எனவே, மாணவ சமுதாயத்திற்குச் சட்டம் பற்றி நன்கு தெரிந்திருப்பது அவர்களுடைய எதிர்காலத்தில் பல்வேறு சிரமங்களைத் தவிர்க்கவும், இலகுவான வாழ்க்கைக்குப் பேருதவியாகவும் அமையும் என்றும் நீதிபதி சுட்டிக் காட்டிப் பேசியிருந்தார்.

இலங்கையின் மக்கள் தொகையில் 40% ஆனோர் ரூ.6,000/= க்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பத்தினர்களாகவே உள்ளனர். இவ்வாறானவர்களுக்கு உதவி செய்யுமுகமாக இலவசச் சட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிகழ்வில் குறிப்பிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மக்களுடைய சுகாதாரத்தில் மன்னர்களின் அக்கறை



அனுராதபுர மன்னர்களுடைய காலத்தில் சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. துறவிகள் மீதும் பாமரமக்கள் மீதும் மன்னர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்கள். இவர்களுடைய நீர்ப் பாவனைகளுக்குள் எதுவிதத்திலும் சுகாதார சீர்கேடுகள் நுழைந்து விடாதபடி அநுராதபுர மன்னர்கள் பல்வேறு பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். இதனை நிரூபிக்கும் வகையிலான ஆதாரங்களை அநுராதபுரத்தில் இன்றும் நம்மால் காணமுடியும்.

அநுராதபுர நகரமானது நன்கே திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதொன்றாகும். கி.மு.4 ஆம் நூற்றாண்டு காலத்தில் பண்டுகாபய மன்னனால் அநுராதபுர நகரம் நிறுவப்பட்டது என்று இலங்கையின்





வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அத்துடன் அந்நகரைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கும் மிக அதிகளவான தொழிலாளர்களைப் பண்டுகாபய மன்னன் ஈடுபடுத்தியுள்ளான் என்றும் கூறப்படுகிறது.

பல்வேறு கட்டட அமைப்பு முறைகளையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி நகரமெங்கும் பல மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன. குளிப்பதற்குரிய குளங்களும், தொட்டிகளும் கூட ஆங்காங்கு அழகாகக் கட்டப்பட்டு நிலத்தின் கீழாகக் களிமண் குழாய்களை. அமைத்து அவற்றினூடாக நீர் பாய்ச்சப்பட்டது. பயன்படுத்திய கழிவு நீர் வெளியேறுவதற்கு வேறு குழாய்களும், அந்நீர் வீணாக்கப்படாமல் விவசாய நிலங்களுக்குச் சென்று சேரும் கால்வாய்களும் அமைக்கப்பட்டமையானது அநுராதபுர மன்னர்களின் சிறந்த ச்மூகப் பணிகளாக இருந்தன.

பிணங்களைப் புதைப்பதற்கு நகருக்கு வெளியே அமைக்கப்பட்ட இடுகாடு ஒன்று, அங்கு இன்றும் காணப்படுகிறது. மேலும் குளிப்பதற்குத் தனியாகவும் வசதியாகவும் கட்டப்பட்ட அறைகளின் தோற்றங்களையும் அங்கு காணக் கூடியதாகவுள்ளது.

அரச குடும்பத்தவர்களினதும், துறவிகளினதும் சுகாதாரத் தேவைகளுக்காக; அவர்களை இடம் விட்டு இடம் கொண்டு செல்வதற்காகவோ அல்லது மருத்துவர்களை ஏற்றி இறக்குவதற்காகவோ நீராவிப் படகுகள் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது. உடன் குணப்படுத்த முடியாத நோயாளர்களுக்காகத் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு வசதியான மருத்துவ விடுதிகளின் எச்சங்களை இன்றும் கூட அநுராதபுர நகரத்திலும் கிராமங்களிலும் காணக்கூடியதாயுள்ளது.

விலங்குகளின் உடல் நலமும் சுகாதாரமும் கூட அப்போது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் சிகிச்சையளிக்கின்ற பல்வேறு வகையான மருத்துவர்கள் அக்காலத்திலும் இருந்திருக்கிறார்கள். ஆனால், தலைமை மருத்துவ அதிகாரி அரண்மனையில் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார். இவர் 'மஹாவெதன' (Mahavedna) என்று அழைக்கப்பட்டார். ஒவ்வொரு மாவட்டங்களுக்கும், கிராமங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் 'ஸுலுவெதன' (Suluvedna) எனப்பட்டார்கள்.

கி.பி 340 இல் அரியாசனம் ஏறிய மன்னன் புத்ததாசன்; தொடர்ந்து 29 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தான். அப்போது நடைமுறையில் இருந்த மருத்துவ சிகிச்சை, சத்திரசிகிச்சை முறைகள், மருத்துவர்களின் நுண்ணறிவு, ஆளுமை பற்றியெல்லாம் புத்ததாச மன்னன் சிலாகித்துக் கூறியுள்ளமை பற்றிப் பல வரலாற்று நூல்களின் மூலம் நாம் அறிந்து கொள்ளமுடியும்.

பொது மக்களின் நலமா[illegible] தன்னுடைய சேவையின் பிரதான இலக்காகக் கொண்டு நாடெங்கும் பல மருத்துவமனைகளையும், சுகாதார நிலையங்களையும் புத்ததாச மன்னன் நிறுவினான் என்று கூறப்படுகிறது.

அப்போதெல்லாம் ஒவ்வொரு 10 கிராமங்களுக்கும் ஒரு மருத்துவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு இருந்தார். மருத்துவத்துறையில் சிறந்த அறிவையும், ஈடுபாட்டினையும் கொண்டிருந்த மன்னன் புத்ததாசன் 'சாரத சங்கிரஹ' என்றொரு மருத்துவக் குறிப்பு நூலையும் எழுதி வெளியிட்டிருந்தான். சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்துகின்ற கத்தரிக்கோல்கள் (Scissors), சிறிய கத்திகள் (Scalpels) போன்றவை தற்போது காணக் கிடைப்பதிலிருந்து முன்பு இக்கருவிகளைப் பயன்படுத்திச் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு.

மேலும் அநுராதபுர காலத்தில் கட்டப்பட்ட மருத்துவமனைகள் சிறந்த கட்டடக்கலையின் அடிப்படையில் நிறுவப்பட்டன என்பதற்கும் தற்போது நிறைந்த ஆதாரங்கள் உள்ளன. இவை உலகின் முதற்தரமான மருத்துவமனைகள் என்று குறிப்பிடும் வகையின. மிஹிந்தலையில் துறவிகளுக்காகவென்று கட்டப்பட்ட மருத்துவமனையின் அமைப்பு, அநுராதபுர காலத்தில் நிலவிய கட்டடக்கலையின் சிறப்பை எடுத்துக்காட்டப் போதுமான ஆதாரமாகும். இங்கு மருத்துவக் குளியல் செய்யக் கூடிய தொட்டியொன்றும் காணப்படுகிறது.

மிகுந்த மூட்டுவலியால் அவதிப்படுகின்ற நோயாளிகளையும், பாம்பினால் கடியுண்டவர்களையும் இந்த மருந்துத் தொட்டியினுள் அமர்த்தி, மூலிகை எண்ணெய்களையும், சாறுகளையும் கொண்டு குளிப்பாட்டுவார்களாம். மூலிகைகளை அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அம்மி, குளவி போன்றன அங்கு இன்னமும் காணப்படுகின்றன. இவ் அரிய, பழைய பொருட்களையெல்லாம் அநுராதபுரத்திலுள்ள அரும்பொருட்காட்சியகத்தில் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயின் தரையில் ஸ்பிரிட் விண்கலம்!

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட 'ஸ்பிரிட்' என்ற விண்கலம் குன்று ஒன்றிலிருந்து இறங்கி நிலப்பரப்பினைத் தொட்டுள்ளதாக நாஸா தெரிவிக்கின்றது.

செவ்வாய்க் கிரகத்தினுடைய மண்ணின் தன்மை எப்படியிருக்கும் என்பது விஞ்ஞானிகளால் இது வரையில் அறியப்படாத விடயமாகவே இருக்கிறது. எனவே, இதன் தன்மையை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட இந்த ஸ்பிரிட் விண்கலம், கடந்த வாரம் தான் செவ்வாய்க் கோளின் தரையினைத் தொட்டுள்ளது.

கடந்த நான்கு மாத காலங்களுக்கு முன்பு குன்றொன்றிலிருந்து கீழிறங்க ஆரம்பித்தது இவ்விண்கலம். 305 அடி உயரமான அக்குன்றிலிருந்து ஸ்பிரிட் தற்போது தரையிறங்கியுள்ள இடமானது ஒரு மீற்றர் உயரமுள்ள மேடான நிலப்பரப்பாகும். பல்வேறு பாறை அடுக்குகளைக் கொண்ட இத்தரைப் பகுதியில் பாறைகளின் அடிப்பரப்புகள் முரடாகவும் மேற்பகுதி வழுவழுப்பாகவும் காணப்படுகின்றதாம்.

இதுவரையில் செவ்வாயைப் பற்றிப் பல தகவல்களை விஞ்ஞானிகள் பெற்றுக் கொண்டார்களாயினும், மண் பற்றியெதனையும் அறிந்து கொள்ள முடியாமலிருப்பது அவர்களுக்குப் பெருங்குறையாக இருந்திருக்கிறது. தற்போது ஸ்பிரிட் விண்கலம் தம்முடைய எதிர்பார்ப்பினைத் தீர்க்கும் என்று நம்பிக் காத்திருக்கின்றனர் விஞ்ஞானிகள். இத்தகவலைக் கார்னெல் பல்கலைக்கழகத் தலைமை ஆராய்ச்சியாளர் ஸ்டீவ் ஸ்கைரஸ் வெளியிட்டுள்ளார்.



# விண்வெளித் தகவல்கள்

லதா

## கோள்களுக்கு எப்படிப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்

ரோம/கிரேக்கப் புராணங்களின் பெயர்களிலிருந்தே பெரும்பாலான கோள்களுக்கு ஆங்கிலத்தில் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ரோமர்களின் காலத்தில் தோற்றத்தை வைத்தும், நடத்தையை வைத்தும் சூட்டப்பட்ட பெயர்கள் வீனஸ் (Venus), மார்ஸ் (Mars) என்பன. வீனஸ் என்பது அழகிய தேவதையின் பெயராகும். மார்ஸ் என்பது போர்க் கடவுளின் பெயர்.

ஏர்த் (Earth) என்ற சொல் பழைய ஆங்கிலத்திலிருந்து பிறந்ததாகும். பிற்காலத்தில் ஐரோப்பாவின் அனைத்து விஞ்ஞானப் பத்திரிகைகளில் ரோமானியக் கலை வாழ்வின் தாக்கத்தினால் ரோமானியப் பெயர்களே வழங்கலாயின. பிரிட்டன், அமெரிக்காவிலும் கூட அப்படியே.

யூரேனஸ், நெப்டியூன் என்பவை கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, பல்வேறு பெயர்களை வைத்துப் பின்பு மாற்றுவதாக இருந்தது. யுரேனஸைக் கண்டு பிடித்த வில்லியம் ஹெர்ஷல், தனது மன்னனான மூன்றாம் ஜோர்ஜ் இன் பெயரை வைத்து 'ஜோர்ஜியம் சைடஸ்' என்று பெயர் சூட்டினார். ஆனால் சில விண்வெளி விஞ்ஞானிகள் 'ஹெர்ஷல்' என்று பெயர் சூட்டினர். ஆனால் மற்றொரு விஞ்ஞானியே 'யுரேனஸ்' என்ற புராணப் பெயரைச் சூட்டினார். 1850 இல் இப்பெயர் நிலைத்து விட்டது.




நெப்டியூனைக் கண்டு பிடித்தவர்கள் ஜோன் கௌச் அடம்ஸ் மற்றும் உர்பெயின் ஜீன் ஜோசப் லெவெரியர் ஆகியோராவர். லெவெரியருக்கு அதனைத் தன் பெயரில் வைக்கவே பெரு விருப்பாக இருந்தது. ஆனால் மற்றவர்கள் ஒப்பவில்லை. 1930 இல் புளூட்டோ கண்டு பிடிக்கப்பட்டது. லாவல் கண்காணிப்பு நிலையத்தில் பணியாற்றிய க்ளைட் டாம்பாக் 'லாவல்' என்று அதற்குப் பெயர் சூட்டினார். அனைத்து மக்களும் ஆளுக்கு ஒரு பெயர் சூட்ட ஆரம்பித்தனர். நியூயோர்க் டைம்ஸ் அதை மினர்வா என்றழைத்தது. ஆனால் ஒக்ஸ்போர்ட் நகரத்தைச் சேர்ந்த பர்னி என்ற 11 வயது சிறுமிதான் புளூட்டோ என்றழைத்தாள்.

## விண்வெளித் தொழில்நுட்பத்தில் மாணவர்களின் ஆர்வம்

கடந்த மாதம் அமெரிக்க நகரங்களின் பல பாடசாலைகளில் விண்வெளித் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு வாரம் ஒன்று, இடம் பெற்றுள்ளது. விண்வெளி பற்றித் தினமும் புதுப்புதுத் தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஏதோ அயலிலுள்ள நாடொன்றுக்குப் பயணம் செய்வது போலவே விண்வெளிக்குப் பயணம் செய்வது என்கிற விடயம் தற்போது ஆகிவிட்டது. விண்வெளியிலுள்ள கிரகங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் அவை பற்றிய அறிதல்களும் கூட நமது அன்றாடத் தேடலாகி விட்டுள்ளன.

எனவே, அமெரிக்கக் கல்வியமைச்சு பாடசாலை மாணவர்களுக்கு விண்வெளித் தொழில்நுட்பம் பற்றிய கற்கை நெறிகளைக் கட்டாயமாக்கும் நோக்கில் தற்போதெல்லாம் அது தொடர்பான கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் மட்டும் கற்கலாம் என்கின்ற நிலைமை மாறி, இத்தொழில்நுட்பக் கற்கை நெறிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளமையானது அங்கு பெற்றோர் மத்தியிலும் பெருத்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

எனவே, தமது பிள்ளைகள் கலந்து கொண்ட விண்வெளித் தொழில்நுட்பக் கருத்தரங்கு வாரத்தில் தாமும் கலந்து கொள்வதற்குப் பாடசாலை நிர்வாகத்திடம் அனுமதி பெற்று 70% ஆன பெற்றோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2003 இல் நாஸா நிலையம் செவ்வாய்க் கோளுக்கு இரண்டு விண்கப்பல்களை ஏவியிருந்தது. சேர்வெயர் (Surveyor), ஒடிஸி (Odyssey) என்ற பெயர் கொண்ட அவ்விரண்டு விண் கப்பல்களைத் தொடர்ந்து, ஐரோப்பிய விண்வெளி நிறுவனமான ஈஸா (ESA) 'செவ்வாய் எக்ஸ்பிரஸ்' என்றொரு விண்கலத்தை அனுப்பியது. 2004 இல் ரோவர் ஊர்திகள் இரண்டும் 2004 ஜனவரியில் அடுத்தடுத்துச் செவ்வாய்த் தளத்தில் வலம் வர ஆரம் பித்தன. அதன் பிறகு 2005 ஓகஸ்ட் 12 இல் செவ்வாய் விண்சுற்றிக் கப்பலை (Mars Orbiter) நாஸா செவ்வாய்க் கோளுக்கு ஏவியது. அது 2006 மார்ச் 10 ஆம் திகதி செவ்வாயைச் சுற்ற ஆரம்பித்து, அடுத்த ஆறு ஆண்டு களுக்குத் தொடர்ந்து வலம் வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இப்பயணத்திற்கான நிதியொதுக்கம் 720 மில்லியன் டொலர்களாகும். இந்த ஓர்பிட்டர் விண்கப்பல் முதல் இரண்டு வருடங்களும் செவ்வாய்க் கோளினுடைய துருவப் பனித் தொப்பியின் (Polar ice Cap) வரலாற்றினை அறிய முனையும். இன்னமும் மூன்று வாரங்களுள் இந்த ஓர்பிட்டர், செவ்வாயை அண்டிச் சுற்றத் தொடங்கி ஆய்வுகள் செய்து பல புதிர்களை விடுவிக்கப் போகிறதென நாஸா எதிர்பார்க்கிறது.

## மார்ச் இல் சுற்றப்போகிறது




'விஜய்' அடுத்த இதழ் மார்ச் 01 ஆம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பரீட்சைக்கு நிகரா





# முக்கிய வி

பாடங்களில் மட்டும் முடங்கிக் கிடக்கும் நீங்கள் பாட இணைச் செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் குறைவு என்பதை நாங்கள் அறிவோம். எனினும், இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் உங்கள் பரீட்சைக்குப் புள்ளிகள் சேர்க்கப்படுமாயின் நீங்கள் அத்தகைய செயல்களில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். எனினும், கற்பது என்பது பாட அறிவைப் பெறுவது மட்டுமல்ல! பாட அறிவுடன் பாட இணைச் செயற்பாடுகளின் மூலம் உங்கள் அறிவுக்குப் பல்வேறு விடயங்களை ஒன்று சேர்ப்பதுமாகும். இவைகளுடன் குணப் பண்புகளும் ஒன்று சேரும் பொழுதே உங்கள் கற்றல் பூரணத்துவம் பெறுகின்றது என்பது உறுதியானதாகும்.

அன்வரும் அரவிந்தனும் ஒரே ஊரில், ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் கல்வி கற்கும் இணைபிரியா நல்ல நண்பர்கள்.



ஆனால்,இவர்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தாலும் இவர்களது சொல், செயல் அனைத்தும் மிக வித்தியாசமாய் இருந்தன. அன்வர் வகுப்பில் என்றும் முதலாவது நிலை. அவன் எப்பொழுதும் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பான். பாடசாலையில் ஆசிரியர்கள் தரும் வேலைகளைத் திறமையாகச் செய்து முடிப்பான். எனினும், அவன் விளையாட்டு, கலை போன்ற வெளிச் செயற்பாடுகளில் அக்கறை செலுத்தவில்லை. அன்வருக்கு நல்ல பேச்சாற்றல் இருந்தும் அவன் பாடசாலையில் விவாதக் குழுவில் இணைந்து விவாதிப்பதற்கோ இலக்கிய மன்றத்தில் இணைந்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும்வதற்கோ முன்வருவதில்லை. அந்த நேரம் வீணானது என எண்ணி இலக்கிய மன்றம் நடக்கும் நாட்களில் அன்வர் பாடசாலைக்குச் செல்வதில்லை.

எனினும், அரவிந்தன் வகுப்பில் பரீட்சையின் போது எப்பொழுதும் பத்தாம் நிலைக்குள் ஓர் இடத்தைப் பெறுவான். எனினும், பாட இணைச் செயற்பாடுகளில் தனது திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்தி விடுவான். விளையாட்டுப் போட்டிகள், விவாத அரங்கு, இலக்கிய மன்றம் போன்றவற்றில் பங்கு பற்றித் தனது திறமையை வெளிப்படுத்தித் தன்னை வளப்படுத்தினான். பாடசாலையில் எல்லோரும் அவனை நேசித்தனர். ஊரவர்களும் அவனுடன் அன்புடன் பழகினர். எந்த இடத்திற்கும் சென்று அவர்களுடன் தொடர்பு கொண்டு ஒன்று சேர்ந்து செயல்படும் திறன் அவனிடம் காணப்பட்டது.

காலம் கடந்தது. அன்வர் கல்வியில் மிக உயர்ந்த நிலைக்குச் சென்றான். நல்ல வேலையும் கிடைத்தது. உயர்ந்த பதவியும் கிடைத்தது. எனினும், அவன் தன் வேலைத்தளத்தில் அடிக்கடி மற்றவர்களுடன் முரண்பட்டுக் கொண்டான். தனக்குக் கீழ் வேலை செய்பவர்களை நிர்வகிக்கவோ மேலதிகாரிகளுடன் நல்ல முறையில் இணைந்து செயல்படவோ, தனது சகோதர உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வேலை செய்யவோ அவன் அறிந்திருக்கவில்லை.

அரவிந்தன் சாதாரண ஒரு தொழிலையே செய்து வந்தான். எனினும், சமுதாயத்தில் நல்லவன் என்ற பெயரெடுத்தான். வாழ்க்கையில் வெற்றி பெற்றான். அன்வர், அரவிந்தன் ஆகிய இருவரது வாழ்க்கையும் பிள்ளைகளாகிய எமக்கு நல்லதொரு பாடமாகும். அவர்களின் வாழ்க்கையை மனதில் வைத்துச் சில முக்கிய விடயங்களை அவதானிப்போம்.

இன்று எமது நாட்டுக்கும் சமூகத்திற்கும் தேவைப்படுவது பல்வேறு விடயங்கள் குறித்த பரவலான அறிவும், திறமையும் உள்ள அரவிந்தன் போன்றவர்களே. அறிவை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் பிள்ளைகளால் பயன் இல்லை என்பதை அன்வரின் செயலில் இருந்து அறிந்து கொள்ளலாம். பரீட்சையில் மாத்திரம் அதிக புள்ளிகள் பெறுவதால் பயனில்லை என்பதும் அத்தகைய பிள்ளைகள் எம்மில் பலர் இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## செயல் திறனின் அவசியம்

இன்று சில பிள்ளைகளுக்கு ஒரு தாவரத்தை நாட்டி அதனை வளர்ப்பதற்குத் தெரியாது. எனினும், பரீட்சையில் விவசாய பாடத்தில் அதி விசேடத் திறமைச் சித்தி பெற்றிருப்பர்.



மனையியலில் திறமைச் சித்தி பெற்ற பிள்ளைக்குப் பொருத்தமான ஒரு வேளை உணவைச் சமைக்கத் தெரியவில்லை என்றால் அந்த மனையியல் பாடத் திறமைச் சித்தியால் பலன் இல்லை அல்லவா?

பௌத்தம், கிறிஸ்தவம், சைவம், இஸ்லாம் போன்ற சமய பாடங்களில் அதி திறமைச் சித்தி பெற்ற மாணவர்களிடத்தில் அன்பு, கருணை, நற்பண்புகள், நற்குணங்கள் இல்லையெனில் அவர்கள் எவ்வளவு தூரம் உயர்ந்தாலும் அதில் பயனில்லை. இன்று இவர்கள் மூலம் பல்வேறு தவறான செயல்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு முக்கிய விடயம் என்னவெனில் இன்று எம்மில் அதிகமான பிள்ளைகள் தாங்கள் கற்கும் பாடங்களுக்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. இது சம்பந்தமாக உங்கள் பெற்றோர்கள் உங்களைச் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதில்லை எனவும் தெரிகிறது. ''மகன் உங்களால் இந்த வேலையைச் செய்யமுடியாது. போய்ப் பாடங்களைப் படியுங்கள்'' என நீங்கள் பெற்றோருக்கு ஏதேனும் உதவிகள் செய்யச் செல்லும் போது சொல்வார்கள் அல்லவா? எனினும், இதுபோன்ற எந்த வேலைகளைச் செய்யவும், அது சம்பந்தமான சிறந்த அனுபவமும் அறிவும், திறனும் உங்களிடம் இருக்க வேண்டும்.

இதற்காகவே, கல்வி அமைச்சில் பாட இணைச் செயற்பாட்டு அலகு என ஒரு பகுதி ஆரம்பிக்கப்பட்டு மேற்குறித்த குறைபாட்டினைத் தீர்ப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பாடத்தை ஒத்த செயற்பாடுகளின் அவசியம்

பாட வெளிச் செயற்பாடுகள் இப்போதெல்லாம் பிள்ளைகளால் செயல்படுத்தப்படுவது மிக மிகக் குறைவு. இதன் காரணமாகப் புத்தகங்களுக்கு மேலாகப் பிள்ளைகள் அறிவைப் பெறுவதில்லை. நடைமுறைச் செயற்பாடுகள் சம்பந்தமான புரிந்துணர்வு சிறிதும் இல்லை. பரீட்சை மாத்திரமே அவர்களின் இலக்காகும். இந்தப் பரீட்சையின் காரணமாக மாணவர்கள் தமது தகைமை, திறமை, குணநலன்களைக் கூட மறந்து விடுகிறார்கள்.

எமது பத்திரிகைக்குச் சிறு வயது முதல் கடிதம் கட்டுரை, சித்திரம், கவிதை போன்ற ஆக்கங்களை அனுப்பிய பிள்ளைகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குச் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காலங்களுக்கு முன்பதாகப் பின்வருமாறு எமக்குக் கடிதம் அனுப்புவார்கள்.

''நான் இப்பொழுது சாதாரண தரப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துகிறேன். அதனால் எனக்கு ஆக்கங்களை எழுதி அனுப்ப நேரமில்லை''இவ்வாறு எமக்குத் தெரியபடுத்திய மாணவர்கள் பின் தம் வாழ்நாளில் ஒரு பொழுதும் தமது படைப்புக்களை எழுதி அனுப்புவதே இல்லை. அதற்கு நேரமின்மையைக் காரணமென்று கூறுவர்.

# ண

இந்த உதாரணம் மூலமாகப் பிள்ளைகள் பரீட்சைகளுக்கு முகம் கொடுப்பதற்காக ஏனைய அனைத்து விடயங்களையும் கைவிட்டு விடுகிறார்கள் என்பதை நாம் அறியலாம். அதேபோல் அவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தாலும் அவர்களிடத்தில் உள்ள இயல்பான திறமைகளை அடக்கி மறைத்து வைத்து விடுகிறார்கள். மேலும் பரீட்சையில் சித்தி அடைந்தாலும் அவர்களுக்குச் சரியான முறையில் தொழில்புரிவதற்கோ சமூகத்தில் வாழவோ முடியாதுள்ளது.

# டயங்கள்

சமூகத்தில் வாழும்போது, எமக்கு எல்லா விடயங்கள் குறித்த அறிவும் அனுபவமும் திறனும் அவசியமாகும். எனினும் இவைகளைப் பாடங்களிலிருந்து மட்டும் பெறுவது எப்படி?

இதனால் பிள்ளைகளாகிய உங்களின் கல்வி அபிவிருத்திக்காகப் பாட இணைச் செயற்பாட்டை அமுல்படுத்தக் கல்வி அமைச்சுத் தீர்மானித்தது. புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் பல்வேறு செயற்திட்டங்களில் உங்களை ஈடுபட வைப்பது இந்நோக்குடனே ஆகும். கல்வி உரிய முறையில் பிள்ளைகளைச் சென்றடையக் கல்வி அமைச்சினால் எல்லாப் பாட அலகுகளும் பாட இணைச் செயற்பாடுகளாக இணைக்கப்பட்டுள்ளன. கல்வி ஆணைக்குழு அறிக்கையில் அறிவு, மனப்பாங்கு, அழகியல் உணர்வு நிறைந்த பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் பாட இணைச் செயற்பாடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## அதிக வாய்ப்புகள்

இன்று இனங்களுக்கிடையிலும் வெவ்வேறு மதத்தவர்களுக்கிடையிலும் ஏற்பட்டுள்ள ஐக்கியமின்மை மற்றும் இனத்தவர்களுக்கிடையிலும் ஏற்படும் பல்வேறு முரண்பாடுகளுக்கும் காரணமாக அமைவது இந்தப் பாடஇணைச்செயற்பாட்டில் ஈடுபடாமல் இருப்பதே ஆகும். இதனை வளர்த்துக் கொள்வதற்கு வாத்திய இசைக்குழு, விவாதம், இலக்கிய விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், சர்வமத விழாக்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவது மிக அவசியமாகும்.

விளையாட்டு, சிரமதானம், சுகாதார சேவைகள், சாரணர், ஊடகவியல், சமூகம், புனித ஜோன் (St.Jone) முதலுதவிப்பிரிவு, பாடசாலை மாணவர் படை அணி, சூழல் அமைப்புப் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாலும் தமது சூழலுக்கும் மற்றவர்களுக்கும் உதவுவதாலும் மனித நேயக் குணாம்சங்கள் வளர்கின்றன.

பாட இணைச் செயற்பாட்டின் போது, புதிய கண்டுபிடிப்புகள், பரிசோதனைகள், ஆய்வுகள்,கண்காணிப்புகள் ஆகியவற்றில் தம்மை அர்ப்பணிக்கும் வாய்ப்பும் ஏற்படுகின்றது. இதன் மூலம் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவழிக்கவும் எதனையும் தேடுதல், ஆராய்ந்தறிதல், விமர்சனம் செய்தல் போன்ற நற் பண்புகள் வளரவும் வாய்ப்பேற்படுகின்றது. அத்துடன் பரந்த மனப்பான்மையோடு ஏற்றுக் கொள்ளும் தன்மையும் உயர்ந்த இரசனைக்குரிய மனநிலையை ஏற்படுத்தவும் முடியும்.

கல்வி அமைச்சு நமது மாணவர்களுக்கு இத்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தப் பல உத்திகளைக் கையாண்டுள்ளது. இந்த உத்திகளில் ஒன்றுதான் பாடசாலை மதிப்பீட்டு முறையாகும். இதன் மூலம் பாடசாலையில் மாணவர்களைப் பல்வேறு செயல்களில் ஈடுபடுத்தி அதற்குப் புள்ளிகள் வழங்கப்படும்.



பிள்ளைக்குச் செயற்பாட்டை கொடுப்பதும் அதற்கு ஆயத்தப்படுத்தும் விதம், அது சம்பந்தமான தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் முறை, அந்தச் செயலைச் செய்யும் படிமுறை, செயல் விளைத்திறன் கிரமமாகச் செய்யும் முறை,நேர்த்தியாகச் செய்யும் விதம் ஆகியவற்றுடன் செயற்திட்டத்தை முழுமையாக முடித்தல் ஆகிய விடயங்களை, படிப்படியாக அவதானித்துப் புள்ளிகள் வழங்கப்படும். இது 'மாணவர் நிபுணத்துவ அறிக்கை' புத்தகம் என அழைக்கப்படும். இப்புள்ளிகள் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தில் சேர்க்கப்படும். பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்கும் பொழுது, பல்வேறு விடயங்களில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்குப் பரீட்சைக்கு மேலதிகமாகப் புள்ளிகள் சேர்க்கப்படும்.

## தொடர்ந்து செயல்பட்டால் திறமை வளரும்

இன்று அதிகமான பாடசாலைகளில் இரண்டு அல்லது மூன்று வருடத்துக்கொரு முறையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்பாடசாலைகளில் அவர்கள் முதலிடத்தைப் பெறுவதற்கு மாத்திரமே கற்றுக் கொடுக்கின்றனர். இதனால் விளையாட்டுத் திறன் மிக்க பிள்ளைகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. அவர்களுக்குத் தமது திறமைகளை மேலும் வளர்ப்பதற்கு, பரீட்சித்துப் பார்ப்பதற்கு, அனுபவிப்பதற்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் அடுத்த முறை விளையாட்டுப் போட்டி நடத்தும் போது அவர்களின் திறமைகள் குறைந்து போய்விடும். எந்த விடயத்தை எடுத்தாலும் அதன் இயல்பானது தம் திறமைகளை வளர்த்துக் கொள்ளாவிட்டால் பயிற்சிகளில் தொடர்ந்து ஈடுபடாவிட்டால், தொடர்ந்து செயல்படாவிட்டால், அந்தத் திறமைகள் பலவீனமடைந்து மழுங்கிப் போய்விடும். திறமை உள்ள பிள்ளைக்கு இது பெரும் பாதிப்பாகும். சில பாடசாலைகள் பிரபலம் அடைந்ததற்குக் காரணம் கல்விக்கு மாத்திரம் முதலிடம் கொடுத்ததால் அல்ல! பல்வேறு விடயங்களில், வெளிச்செயற்பாடுகளில் பெருமளவில் வெற்றிகரமாக மாணவர்களை ஈடுபடுத்தியதாலேயாகும். இதன்படி மாணவர்கள் பாடசாலைப் பாடக் கல்வியைப் பெறுவதுபோலவே பாட இணைச் செயற்பாடுகளிலும் அதிக அக்கறைச் செலுத்த வேண்டும்.

ஜெயகர்




விஜய்யில் வரும் அனைத்து விடயங்களும் மாணவர்களின் வாசிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கின்றன.

இரா.இனியலக்ஷ்மி, பத்தனை.

''விஜய்'' பத்திரிகை மூலம் சிறந்த செய்திகளை அறியக் கூடியதாய் உள்ளது. ''விஜய்'' ஆசிரியர் தலைப்பு மூலம் நல்ல கருத்துக்கள் சமுதாயத்திற்கு கிடைக்கின்றன. பக்க வடிவமைப்புகளும் அழகாக உள்ளன.

டபிள்யூ.எம்.வஜிஸாத், பொத்துவில்.

''விஜய்'' ஸ்போர்ட்ஸ், சிறுகதைகள் மற்றும் விண்வெளித் தகவல்கள் ஆகியன சிறப்பாக உள்ளன.

ஐ.ஏ.அனஸ், பலஹத்துறை.

சிங்களம் கற்போம் என்ற பகுதி மிகவும் நல்லது. அதுபோல் ஆங்கிலம் கற்போம் என்னும் பகுதியும் வெளிவர வேண்டும்.

செ.யசோதரன், கிளிநொச்சி.

விஜய் பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அம்சங்களும் அனைவருக்கும் பல வழிகளில் பலன் அளிக்கின்றன.

.எஸ்.சண்முகப்பிரியா, வெளிமட.

விஜய் பத்திரிகையில் வரும் பல விடயங்களும் மாணவர்களுக்கு பயனுள்ளவையாக உள்ளன.

வி.கிஷோ, மானிப்பாய்.

வாரா வாரம் வரும் புதன் புஷ்பமே! எம் மனதைக் கவர்ந்த இளந் தென்றலே! உன் சேவை மென்மேலும் உயர என் வாழ்த்துக்கள்.

எம்.டிலக்ஷினி, உக்குவெல.

விஜய் என்ற சொல் மூன்றெழுத்து. அதில் உள்ளதோ பல கருத்து. உனக்குப் புகழும் சிறப்பும் வந்தடைய வாழ்த்துக்கள்.

மனோஜ்பிரபா, கந்தப்பளை.

கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு விஜய்யின் ஆக்கங்கள் மிகவும் பிரயோசனமாக இருக்கின்றன.

திருமதி. சரினா நஸீர், திருகோணமலை.

எனது அறிவுக் கண்களையும், என் போன்ற எத்தனையோ உள்ளங்களின் தேடல்களையும் வாராந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கும் உனது அளப்பெரிய சேவை மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

நி.டிலர்ஷனா, கிளிநொச்சி.

நான் விஜய் பத்திரிகையைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். எனக்கு விஜய் வாசிப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. விஜய் பத்திரிகையில் வெளிவரும் அனைத்து விடயங்களும் சிறப்பானவை. விஜய் மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

எம்.என்.எஸ்.சஹானா, ஹம்பாந்தோட்டை.

விஜய் பத்திரிகை வெளியான பின்னர் மாணவர்களின் அறிவு கடலளவு பெருகிவிட்டது. 2006 பெப்ரவரி 08 இதழில் 'எயிட்ஸ் என்பது என்ன?' என்ற கட்டுரையை வாசித்தேன். இப்பகுதி உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு அதிக பிரயோசனமாக அமைகின்றது.

நாகமணி கமலினி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்டு, சிங்கி இறால், சிறு இறால் போன்ற மேலோட்டுக் கடல்வாழ் உயிரினங்களில் புழுப் பூச்சியாக 'பைலியம் அர்த்தரோடா' எனும் வகையினத்தைச் சேர்ந்ததே பூரான். சில பூரான்களுக்குப் பல நூறு அல்லது பல்லாயிரம்

## அறிவியற் கலசம்

பருக்கை : 48

அன்புச் செல்வங்களே,

விஷ ஜந்துக்களில் பூரான் மிகவும் கடுப்பானது. இதற்குச் சின்னஞ் சிறிய கால்கள் பலவுண்டு. இது மிகவும் விநோதமான ஓர் உயிரியாம். அது பற்றி, அறிவியல் நோக்கில் இங்கு சிறிது பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோமாக.

நன்றி.

# பல்காலிப் பூச்சி பூரான்

(இலட்சத்துக்கு மேலும்) கால்கள் இருப்பதால், பூரான் எனும் பூச்சி ஒரு பல்காலியாகும்.

பொதுவாக-எமது கொல்லைப் புறத்தின் தோட்டத்திலும், இருள் சூழ்ந்த இடத்திலும், தாவரங்கள், பாறை இடுக்குகள் போன்ற மறைவிடங்களிலும் ஊர்ந்து உலாவித் திரியும் பூரான்கள் பெரும்பாலும் பெருந் தீங்கு தராத ஓர் உயிரினமாகும். வீடுகளில் உள்ள புழக்கமில்லாத அறைகள், கூரைகள், ஈரமான இருண்ட தரைகள், கழிவறைகள் போன்ற ஒதுக்கப்புற இடங்களில் அநாயாமாக நெளிந்து நெளிந்தும், சுருண்டு சுருண்டும் செல்லும் ஓர் உயிரினமான பூரான்களே இவை. இவை மிக வேகமாகப் பாம்பைப் போல் ஊர்ந்தோடும். சில வேளைகளில், அப்படியே 'செத்தாரைப் போல், இயக்கமின்றித் தகடு போல் வீட்டின் படுக்கை விரிப்புகள், துணிகள் போன்றவற்றிற் கிடக்கும்.



தட்டையான துண்டு துண்டான உருளை வடிவிலான உடலமைப்புக் கொண்ட பூரானின் உடல், சிறிது சிறிதான பாகங்களாக அமையும். அதன் ஒவ்வொரு பாகமும் ஒரு சோடி அல்லது தனியே ஒன்று அல்லது இரண்டு, கால்களைக் கொண்டும் இருக்கும். இவற்றின் உடலையும் கால்களையும்





கொண்டு இவற்றைப் பல்காலி உயிரினம் என்றும் 'பல்லாயிரக்காலி' என்றும் வகைப்படுத்தி இனங் காணப்பெறும். பெரும்பாலான பூரான்கள் மாமிச பட்சிணிகளாகவே இருக்கும். இருந்தும், இதற்கு மாறாக இலட்சக்காலிகள், தாவரங்கள் இலைகளை உண்டு, தாவர பட்சிணியாக இருக்கின்றன.

பூரானின் முதற் சோடிக் கால்கள், நச்சுக் கடிவாய் கொண்ட உறுப்பு, கீழ்த் தாடைக்குக் கீழ் அமைந்திருக்கும். தலையில் நீண்ட கொம்பு போன்ற இரண்டு உறுப்புகள், கண்ணுக்கு அருகில் கண்கள் போலவே அமைந்திருக்கும். இதன் கண்கள் பார்வைக்கு எமது இருக்கும். முதுகில் நீண்டு நேர்த்தியாக வரைந்த, வளைந்த கறுப்புக் கோடுகள் கால்களுக்கு இடையில் ஓடியபடி காணப்பெறும். இவ்வகைக் கோடுகள் மாறி மாறி இருண்ட நிறத்திலும், வெண்மையான நிறத்திலும், வளைந்த பட்டிகள் போலிருக்கும்.



முதிர்ந்த வீட்டுப் பூரான்கள் ஓரங்குல நீளத்தில், 15 சோடிக் கால்களுடன் இருக்கும். பெண் பூரான்களின் பின்னங் கால்கள், ஆண் பூரான்களிலும் இரண்டு மடங்கு நீண்டும் பருத்தும் இருக்கும். அவற்றின் ஒரு சோடி உணர்கொம்புகள் மெலிந்து, தலையில் இருந்து முன்னோக்கி நீண்டிருக்கும். அவை கால்களின் உறுதியால் மிக விரைந்து, இரயில் வண்டி போல், ஊர்ந்து ஓடும்.

பூரான்கள் சிறு பூச்சிகளை உண்ணும். குறிப்பாக, சிலந்திப் பூச்சிகளின் முட்டைப் பருவத்துக் குஞ்சுகளைத் தேடித் தேடித் தின்னும். பல வழிகளில், பூரான்கள் மனிதருக்குத் தொல்லை தரும் பிராணிகளில் ஒன்றாக இருந்து உபத்திரவம் தரும். அதன் கொடுக்கில் நச்சுத் தன்மை உள்ள விஷம் இருக்கும்.

இதற்காக, மனிதர்கள், வீட்டுப் பூரான்களை ஒழிப்பதற்கு அவை உறைந்து, உலாவும் இருட்டறை, தளபாடங்கள், பெட்டிகள், திறந்த தட்டிகள் போன்றவற்றுக்குக் கிருமிநாசினி போன்றவற்றைத் தெளித்து, அல்லது விசிறி பூரான்களை அழிப்பர். எனினும், சூழலியற் காப்பாளர் அவற்றை அழிப்பது நல்லதல்ல என அறிவுறுத்துகின்றனர். ஏனெனில், இச் சிற்றுயிர்கள் கண்ணுக்குத் தெரியாத தொற்றுக் கிருமிகளையும், நுண்கிருமிகளையும் எளிதாக அழித்து (அவற்றை உண்டு), மனிதனுக்கும் சூழலுக்கும் நன்மை செய்கின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படப்பிடிப்பு :- எஸ்.அனுர்ஜன்

# மலையக மக்களின் துன்பியல் வாழ்வு

பிரபல எழுத்தாளர் மு.சிவலிங்கத்தின் 'விதை நெல்' நூல் வெளியீட்டு விழாவில் மலையக எழுத்தாளரும் ஆய்வாளருமான எம்.வாமதேவன், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் தீனதயாளு எழுத்தாளர் சி.வி.ராமையா ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றுவதையும், நூலாசிரியர் மு.சிவலிங்கம், "விஜய்" பத்திரிகை ஆசிரியர் இரா.சடகோபன், எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், மூன்றாவது மனிதன் ஆசிரியர், எம்.பௌஸர், புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

எழுத்தாளர்கள் என்பவர்கள் தம் வாழ்வில் கண்ட, கேட்ட அறிந்தவற்றை, எந்த மக்களுக்காக எழுதுகிறார்களோ அந்த மக்கள் தொடர்பான பாத்திரப் படைப்புக்கள் ஊடாகத் தமது கருத்துக்களையும் சேர்த்து எழுத்துக்களில் வெளிப்படுத்துகிறார்கள்.
அந்த வகையில் "ஒரு விதை நெல்" என்னும் இந்நூலில் உள்ள கதைகள் ஒவ்வொன்றும் மக்களின் துன்ப துயரங்களை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.
இவ்வாறு கடந்த வாரம் சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற, எழுத்தாளர் மு.சிவலிங்கத்தின் "ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக விழாவில், தலைமை வகித்து உரையாற்றிய முன்னாள் இந்து கலாசார அமைச்சர் பி.பி.தேவராஜ் கூறினார்.
அவரைத் தொடர்ந்து உரையாற்றிய கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் நூல் அறிமுக உரையை நிகழ்த்துகையில் மலையக மக்கள் பற்றிப் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளத்தக்கதாக இந்த நூல் எழுதப்பட்டிருப்பதாகவும் இந்நூல் மலையக மக்கள் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய ஒரு வரலாற்று ஏடாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் சிறந்த அரசியல்வாதியும், தொழிற்சங்கவாதியுமான இந்நூலா சிரியர் சிறப்பா இந்த நூலைப் படைத்திருப்பதன் மூலம் இலக்கியத்திலும் வெற்றி பெற்றிருப்பதை இந்த நூல் உறுதி செய்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

விஜய் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இரா.சடகோபன் பேசுகையில் "நீண்ட காலக மலையக மக்கள் மற்றும் அவர்கள் தொடர்பாக இலக்கியங்களில் நாம் மலையகத்தவர் என்ற உணர்வு மழுங்கடிக்கப்பட்டு, நமது சொந்த மண் இந்தியாவே என்ற உணர்வு மேலோங்கச் செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் இத்தகைய போக்கு நிலவி வருவது என்பது ஓர் ஆரோக்கியமான போக்கு அல்ல. நாம் மலையகத்தவர் என்ற நோக்கில் நம்து உரிமைகளை இடித்துரைக்கும் வகையில் சிருஷ்டிகள் அமைய வேண்டும்" என்று கூறினார்.
மூன்றாவது மனிதன் ஆசிரியர் எம்.பௌசர் ஆய்வுரை நிகழ்த்துகையில் "அண்மைக்காலத்தில் மலையக இலக்கியங்கள் பிரமிக்கும் வகையில் எழுச்சி பெற்றுள்ளன. இலங்கை இலக்கியப் பரப்பில் இதற்குத் தனியான இடம் உண்டு. எனினும், அதன் முக்கியத்துவம் முற்றாக அங்கீகரிக்கப்படவில்லை" என்று கூறினார்.

நாவல், சிறுகதை எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் பேசுகையில் மலையக மக்கள் வாழ்வியல் மிகவும் துன்பியலுடன் கலந்தது. காலத்துக்குக் காலம் அவர்கள் பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். மு.சிவலிங்கத்தின் இந்தக் கதைகள் அநேகமாக அவர்களுடைய துன்பியல் வாழ்வை எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய பிரச்சினைகளை ஆய்வுகள் மூலம் அறிய வேண்டியதில்லை. இத்தகைய கதைகள் ஊடாகவே அறிந்து கொள்ளலாம்" என்று கூறினார்.

நூல் ஆசிரியர் மு.சிவலிங்கம் ஏற்புரையாற்றுகையில் : "ஒரு விதை நெல்" என்று இந்த நூலுக்குப் பெயர் வைத்திருப்பதற்குக் காரணம் இந்நூல் மலையகத்தை மட்டும் மையமாகக் கொண்டு எழுதப்படவில்லையென்றும் தேசிய ரீதியிலான தகவல்களை உள்ளடக்கி எழுதப்பட்டது" என்றும் கூறினார்.
"இலக்கியம் சமுதாயத்துக்குச் சேதி சொல்லும் தூதுவனாகவும், சமூகத்தை வழி நடத்திச் செல்லும் சேவகனாகவும் அமைய வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாகும். நான் இங்கு அதிகம் பேசக்கூடாது ஏனெனில் இந்தப் படைப்புக்குள்ளே நான் நிறையப் பேசியிருக்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விழாவில் வரவேற்புரையைத் தினகரன் பத்திரிகையாளர் விசு.கருணாநிதி நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியைப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். சென்னை, மணிமேகலைப் பிரசுர வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

ஆர். ராஜலிங்கம்




# இனநல மற்றும் இன முரண்பாட்டுக் கவிதைகள்

இக்கவிதைகளின் உயர்நிலை இனப்பற்று என்னும் உணர்வு- அக்காலத்தில் நம் சூழலிலே தலையெடுத்த மொழிப்பற்று, மொழியன்பு என்பவற்றை மையமாகக் கொண்டே எழலாயிற்று. அன்றைய பள்ளிச் சிறுவர்கள் பாரதி, பாரதிதாசன், நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை, தேசிகவிநாயகம்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோரின் படைப்புக்களை விரும்பிப் படித்தவர்கள். இந்தக் கவிதைகளைத் தவிர, ரா.பி.சேதுப்பிள்ளை, சி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி முதலானோரின் ஆக்கங்களும் புத்தகச் சந்தையில் நிறையப் புழங்கின. இவற்றில் வரும் அடுக்குமொழி வசனங்களும் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகளும் கூட நம்மவரின் வாசிப்புப் பசிக்கு இரை போட்டன. மொழி அபிமானங்களும் தீவிர முழக்கங்களும் இள வயதினரிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றன. இந்த மொழியின்பத்தின் வசப்பட்டு, கிறங்கி நின்ற என் போன்றோர்க்கு, தமிழின் பெருமையையும் சிறப்பையும் பாடுவது இயல்பாகவே வந்தமைந்த ஒரு 'கலைத்தொழில்' ஆயிற்று. இவ்வாறு இ.முருகையன் இந்நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தேரிவிப்ஞ்பது.



இதற்கிடையில், 1956 இல் ஈழத்தமிழ் மக்களின் அரசியல்-சமூகச் சூழலில் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. தேர்தலில் வென்று அரசு கட்டில் ஏறிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அதுவரை ஆட்சி மொழியாய் இருந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அதன் இடத்திலே சிங்கள மொழியை மாத்திரம் அமர்த்திற்று. இச்சட்ட ஆக்கத்தினால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தாம் வஞ்சிக்கப்பட்டு விட்டதாக உணர்ந்தனர். இதனுடன் தான் இலங்கையின் இன முரண்பாடு முனைப்புப் பெற்று மூர்க்கமான வடிவத்தை அடையத் தொடங்கியது. இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்ப்பு இயக்கங்கள் பலவற்றில் ஈடுபடலாயிற்று. அக்கட்சியின் பிரசார வேகங்கள் முடுக்கி விடப்பட்டன. சத்தியாகிரகம், சட்ட மறுப்பு, அறப்போர் என்றெல்லாம் முழக்கங்கள் கேட்கத் தொடங்கின.

இந்தப் புதிய அலையின் ஓர் அம்சமாகவே இந்தத் தொகுதியிலுள்ள முதலாம் பகுதியின் ஆக்கங்கள் அமைகின்றன. எனினும், இப்பகுதியின் இறுதிப் பாகத்திலே, இனவிடுதலை இயக்கத்தில் சில தடுமாற்றங்களும் சஞ்சலங்களும் தோற்றுவித்த தயக்க மயக்கங்களை விமர்சனம் செய்யும் கவிதைகளும் உள்ளன. 'வெட்கம் கொள்ளுக', 'யாத்திரை பலவகை' ஆகிய உருப்படிகளை நோக்குக. 'பண்ணுங்கோ திமிங்கலத்தை', 'நண்டு விடு தூது', 'வாரும் எங்களுக்குள்ளே ஓர் மற்புரிந்து மாளுவோம்' என்பவற்றிலுள்ள கிண்டலும் குறும்பும் அதிருப்தி ஒன்றினை நோக்கிய ஒரு திருப்பத்தின் முன்னறிப்புகளாகக் கொள்ளத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தின் அறியாமை

மிருகங்களுக்கு அரசனான சிங்கம், ஒருநாள் குரங்கை அழைத்து, எல்லா மிருகங்களையும் உடனடியாக அணிவகுத்து நிற்க வைக்குமாறு உத்தரவிட்டது. சிங்கத்தின் உத்தரவைக் குரங்கு எல்லா மிருகங்களிடமும் சொல்ல, அவையெல்லாம் ஓர் இடத்தில் அணிவகுத்து நின்றன.



சிங்கம், குரங்கை அழைத்துக் கொண்டு சென்று, அணிவகுத்து நின்ற சிறுத்தை, கரடி, ஓநாய், காட்டுப் பூனை, கழுதை, முயல் ஆகியவற்றைப் பார்வையிட்டது. அப்போது அணிவகுப்பில் கடைசியில் நின்ற கழுதையையும், காட்டு முயலையும் பார்த்துச் சிங்கம் சிரிக்கத் தொடங்கியது.

குரங்கு அது கண்டு ஆச்சரியத்துடன், 'அரசே, ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டது.

சிங்கம் உடனே காட்டு முயலையும், கழுதையையும் சுட்டிக்காட்டி 'நான் இந்தக் கழுதையைப் பார்த்துத்தான் சிரித்தேன். இதற்கு மூளையே இல்லை. அத்தோடு இந்தச் சின்ன மிருகமான முயல் எப்படி இந்த அணிக்குள் சேர்ந்தது? நாம் யுத்தத்துக்குப் போனால் இவற்றால் என்ன செய்ய முடியும்? அதுதான் எனக்குச் சிரிப்பாக இருக்கிறது' என்று சொன்னது சிங்கம்.

குரங்கு அதற்குப் பதில் கூறியது. 'அரசே! நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நீங்கள் சொல்வது போல் கழுதைக்கு மூளை இல்லைத்தான். அதனால் யுத்தம் செய்ய முடியாதுதான். ஆனால் அது ஒரு சிறந்த ஊதுகுழல். அது சத்தம் போட்டால் உடனே நமது அணியை ஓர் இடத்தில் திரட்ட முடியும். முயலைப் பொறுத்தவரையில் நமது அணியினர் எங்காவது பிரிந்துவிட்டால் இந்த முயல் நம்மவர்களின் ஒற்றனாகச் செயல்படும். அது வேகமாக ஓடக்கூடியது' என்று குரங்கு விளக்கமளித்தது..

குரங்கின் விளக்கத்தில் உள்ள உண்மையை உணர்ந்து கொண்ட சிங்கம் 'ஆமாம் நீ சொல்வதே சரி. ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான திறமை இருக்கத்தான் செய்கிறது. அதை உணராமல் பரிகசித்தமை என் தவறுதான்' என்று கூறி மனம் வருந்தியது.

பா.மோனிஷா,
தரம் - 9
முகத்துவாரம் இந்துக் கல்லூரி,
கொழும்பு 15.

# உன்னத நட்பு

ரோஜாவும், சத்யாவும் நெருங்கிய தோழிகள். ரோஜா பணக்கார வீட்டுப் பிள்ளை. அவளின் வகுப்பில் படிக்கும் சத்யா மிகவும் ஏழை. அதே சமயம் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. நல்ல குணமும் உள்ளவள். ரோஜா சத்யா மீது அதிக அன்பு கொண்டவள். இருவரும் இணைபிரியாத தோழிகள்.

பாடசாலைக்கு ரோஜா காரில் செல்வாள். அதே பாதையில் சத்யா நடந்து செல்வாள். அவளை ஒரு நாளாவது தனது காரில் ஏற்றிச் செல்லலாம் என்றால் அவளின் அப்பா அதற்கு அனுமதி தருவதில்லை. ரோஜா தனது வீட்டிலிருந்து கொண்டு வரும் விலையுயர்ந்த உணவு வகைகளைச் சத்யாவிற்குக் கொடுத்து உண்பாள். சத்யா வேண்டாம் என்று மறுத்தாலும் ரோஜா விடமாட்டாள். சத்யாவின் உணவையும் ரோஜா எடுத்து உண்பாள்.

ரோஜாவின் எதிர்வீட்டிலுள்ள சுவர்ணாவும் அதே வகுப்பில் படிப்பவள் தான்! சத்யாவுடன் ரோஜா அன்பாக இருப்பது சுவர்ணாவுக்குப் பிடிக்கவில்லை. சுவர்ணா ரோஜாவின் அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் அவர்களின் நட்புப் பற்றிக் கூறுவாள். ரோஜாவின் அம்மாவிற்கு ரோஜா ஏழைகளுடன் பழகுவது பிடிக்காது. அதே சமயம் சுவர்ணாவின் குணம் பற்றியும் தெரியும். அதனால் அது பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒருநாள் ரோஜாவின் மாமா ரோஜாவிற்கு அன்பளிப்பாகக் கொடுத்த பேனா தொலைந்து போய்விட்டது. ரோஜா பேனாவைக் காணாமல் அழத் தொடங்கிவிட்டாள்.

அவள் வகுப்பிலுள்ள எல்லோரிடமும் கேட்டபோது எவரும் எடுக்கவில்லை என்றே கூறினர். வகுப்பாசிரியை வகுப்பினுள் நுழைந்தபோது மாணவிகள் இது பற்றிக் கூறினார்கள். எல்லோரின் புத்தகப்பைகளையும் சோதனையிட்டபோது சத்யாவின் பையினுள் பேனா இருப்பதைக் கண்டார் ஆசிரியை. சத்யாவைத் திட்டினார். உடனே ரோஜா ஆசிரியையிடம் 'சத்யா ஒருபோதும் அப்படிச் செய்திருக்கமாட்டாள். அவளைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்' என்று உறுதியாகக் கூறினாள். அவள் சத்யாமீது வைத்துள்ள நம்பிக்கையை அறிந்த ஆசிரியை மனதுக்குள் மகிழ்ந்தவாறு முகத்தில் கடுமையைக் காட்டியபடி 'அப்படியானால் இவளின் பேனாவை யார் எடுத்துச் சத்யாவின் பேக்கில் வைத்தது? உண்மையைச் சொல்லுங்கள்' என்றார். செய்த திருட்டு வேலையை மறைக்க முடியாமல் பயந்த சுவர்ணா நடுங்கியபடி, 'நான்தான் 'மிஸ்' அப்படி ஒரு காரியத்தைச் செய்தேன்' என்று கூறித் தான் செய்த தவறுக்கு மன்னிப்பும் கேட்டாள்.

ஆசிரியை சுவர்ணாவைத் திட்டி எச்சரித்தார். பின்னர் முகமலர்ச்சியுடன் ரோஜாவைப் பாராட்டி 'அவள் தனது நண்பி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளாள் இப்படி நீங்கள் எல்லோரும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்துப் பழகவேண்டும்' என்று கூறினார்.

சத்யா ரோஜாவின் கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டு உன்னைப் போல் ஒரு தோழி கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்றாள்.

எம்.எல்.லஸ்னா, தரம் - 9,
அக்/ஸாஹிரா வித்.,
அக்கரைப்பற்று.



## உயர்ந்தோர் உதிர்த்தவை

- எந்த வேலையாக இருந்தாலும் நான் நாளை என்று தள்ளிப் போட்டதே இல்லை.
  ரூஸ்வெல்ட்
- நிறைய இரக்கம் காட்டுங்கள்; ஆனால் ஏமாந்து விடாதீர்கள்.
  மாத் யூக்ரீன்
- ஒருவன் தன் உழைப்பில் பெற்ற கூழ், அமிர்தத்திலும் சிறந்தது.
  யேசுபிரான்
- நன்மை நேரினும் சரி; தீமை நேரினும் சரி உனது பயனை அடைந்தே தீர வேண்டும்.
  புத்தபிரான்
- தன்னம்பிக்கையோடும் மனவலிமையோடும் போராடினால் வெற்றி வீடு தேடிவரும்.
  எமர்சன்




சு.ம.தமிழ்ச்செல்வன், தரம் - 11,
ஒட்டுசுட்டான் ம.வி, முல்லைத்தீவு.

## விடுகதைகள்

1. என்னைக் கண்டால் ஆசை தட்டினால் ஓசை நான் யார்?
2. மரத்தில் பிறந்து மனித உடலில் தவழ்வேன் நான் யார்?
3. அழகாய்ப் பூப் பூக்கும் அம்மாடி எனக் காய் காய்க்கும். அது என்ன?
4. குளம் நிறைய நீர் இருந்தும் குளிக்கப் போதாது. அது என்ன?
5. பகலில் ஒதுங்கி இருப்பேன். இரவில் காவல் காப்பேன். நான் யார்?
6. ஆற்றிலே தண்ணீர் ஓட, தண்ணீரில் மீன் ஓட, காத்திருக்கும் கமலக்கன்னி. அது என்ன?

விடைகள்

1. தங்கம்
2. பருத்தி ஆடை
3. பூசனிக்காய்
4. இளநீர்
5. கதவு
6. கொக்கு

ஆர்.சுபாஷினி, வத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

பாவா எனும் நாட்டை பத்மன் எனும் ஒரு வயதான அரசர் ஆண்டு வந்தார். அவருக்குச் சங்கன் என்று ஒரு மகன் இருந்தார். சிறிது காலத்தின் பின் அரசர் பத்மன் காலமானார். அதனையடுத்து அவர் மகன் சங்கன் அரசனானார்.

சங்கனுக்கு இருந்த ஒரே உறவான அவனது தந்தை இறந்ததன் காரணமாக அவர் மிக மிகத் துயரமடைந்தார். வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அவர் அறையை விட்டு வெளியே வருவதே இல்லை. யாரையும் சந்திக்கவும் விரும்பவில்லை. அதனால் அவர் அரச வைக்கு வருவதையும் கூடத் தவிர்த்து வந்தார்.

ஒரு நாள் பிரதம மந்திரி அனைத்து மந்திரிகளையும், வீரர்களையும், உயர் குடிகளையும் அழைத்துச் சந்திப்பு ஒன்றை நடத்தினார். இந்தச் சந்திப்பு பிரதம மந்திரியின் மாளிகையில் நடந்தது. அனைவருக்கும் முன்னிலையில், பிரதம மந்திரி எழுந்து 'என் நண்பர்களே, அரசரின் நடத்தை உங்களை ஆச்சரியத்தில் மூழ்க வைக்கவில்லையா?' என்று கேட்டார்.

'நீங்கள் கூறுவது அவர் மக்கள் மண்டபத்துக்கு சமூகமளிக்காததைப் பற்றி அல்லவா?' என்று இன்னுமொரு மந்திரி கேட்டார்.

'ஆம், அவர் இராஜ்ஜியத்தை நடத்துவதாக இல்லை' என்று பதிலளித்தார் பிரதம மந்திரி.

'அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்?' என்று வினவினார் ஒரு மக்கள் பிரதிநிதி.

'ஏன், நமது பிரதம மந்திரி அரசராகலாமே' என்று யோசனை கூறினார் இன்னுமொரு மந்திரி.

மந்திரி, பிரதம மந்திரியின் பக்கம் திரும்பி 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'நல்லது எனக்கு இதில் ஆட்சேபனை இல்லை. இதற்கு எல்லோரும் சம்மதம் என்றால் எனக்கும் பூரண சம்மதம்' எனக் கூறினார் பிரதம மந்திரி.

'நாம் இது பற்றி நன்கு ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும்' என்றார் மக்கள் பிரதிநிதி ஒருவர்.

'ஆமாம். அதுதான் நல்ல யோசனை' என்று கூறினார்கள் ஏனையோர். இதனையடுத்து பிரதம மந்திரியின் மாளிகையில் ஒவ்வொரு நாளும் ஒரு சந்திப்புக் கூட்டத்தை நடத்தினர்.

ஒருநாள் ஒரு மூதாட்டி அரசரின் மாளிகைக்கு வெளியில் ஏதோ விற்றுக் கொண்டு இருந்தாள். அவளின் குரல் மட்டும் அரசன் சங்கனுக்குக் கேட்டது. ஆனால் அவள் என்ன விற்கிறாள் என்பது அரசருக்குத் தெரியவில்லை. அந்த மூதாட்டி தனது அறைக்கு வெளியே இருந்து விற்பனை செய்வதை அரசர் அறிந்தார். அவள் விற்பது என்னவென்று அவருக்குக் கேட்டது. அவள் ''ஞானம்!, ஞானம்!, ஞானம்! யாருக்கு ஞானம் வேண்டும்?'' எனக் கூவிக் கொண்டிருந்தாள்.

சங்கனுக்கு இவள் எப்படி ஞானத்தை விற்கிறாள்? என அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்பட்டது. அவர் ஒரு சேவகனை அழைத்து அந்த மூதாட்டியைக் கூட்டி வருமாறு கூறி அனுப்பினார். அவள் உள்ளே வந்ததும் அரசர் அவளைப் பார்த்துச் சிறு புன்னகையுடன் 'நீ என்ன விற்கிறாய்?' என்று கேட்டார்.

'ஞானம் விற்கிறேன், அரசரே' என்று பதிலளித்தாள் மூதாட்டி.

'எனக்கு ஞானம் தரமுடியுமா?' என்று கேட்டார் அரசர்.

'சரி, தருகிறேன்' என்று கூறிய அவள்,

*"தூங்குவதை விட விழித்திருப்பது நல்லது.*
*விழித்திருப்பதை விட உட்கார்ந்து இருப்பது நல்லது*
*உட்கார்ந்திருப்பதை விட நிற்பது நல்லது*
*நிற்பதை விட நடப்பது நல்லது"*


என்று கூறினாள்.

அரசர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பின் 'இதற்கு என்ன விலை?' எனக் கேட்டார்.

'ஒரு செப்புக்காசு' என்றாள் கிழவி. சங்கன் சிறிது நேரம் யோசித்தார். பின்னர் கிழவியிடம் ஒரு செப்புக் காசைக் கொடுத்து அனுப்பினார்.

அரசர் திரும்பவும் படுக்கைக்குச் சென்றார். அவரால் கிழவி கூறிய வார்த்தைகளை மறக்க முடியவில்லை. அவர் மெதுவாகக் கிழவி கூறிய வார்த்தைகளைக் கூறினார். அவரால் படுக்கையில் இருக்க முடியவில்லை. உடனே எழுந்து வேறு உடைகளை மாற்றிக் கொண்டார். இருட்டியதும்

## அரசனும் மூன்று திருடர்களும்



மாளிகையை விட்டு யாரும் அறியாத வகையில் வெளியே சென்றார். அன்று அமாவாசை தினமாதலால் கரிய இருள் சூழ்ந்திருந்தது. அந்த இருளில் யாரோ சிலர் பேசிக் கொள்ளும் குரல் அவருக்குக் கேட்டது. சங்கன் நன்கு உற்றுப் பார்த்தார். அப்போது அங்கே மூன்று உருவங்களைக் காணமுடிந்தது. சங்கன் அவர்கள் என்ன பேசிக் கொ[illegible] அங்கே பேசிக் கொண்டு இருப்பவர்கள் மூவர் என்றும் அந்த மூன்று பேரும் திருடர்கள் என்றும் சங்கனுக்குப் புரிந்தது. சங்கன் மூதாட்டி கூறிய வசனங்களைப் போன்று வேறு விதமாகப் பாடலானார்.

*'ஒருவரை விட இருவர் நல்லது.*
*இருவரை மூவர் நல்லது*
*மூவரை விட நால்வர் நல்லது"*

இதைக் கேட்ட திருடரில் ஒருவன் 'இங்கு நாம் மூன்று பேர்தான் இருக்கிறோம். நான்காவது யார்?' எனக் கேட்டான். சங்கன் உடனே திருடர்களின் அருகில் சென்று 'நான்தான் நான்காமவர். என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் நீங்கள் சொல்வதைச் செய்வேன்' என்றார்.

'சரி, சரி நீ எங்களில் ஒருவனாக இருக்கலாம்' என்றான் ஒரு திருடன்.

'நாங்கள் சீக்கிரம் பணக்காரராக ஒரு யோசனை கூறுவாயா?' என்று முதலாம் திருடன் சங்கனைப் பார்த்துக் கேட்டான்.

சங்கன் யோசித்துக் கொண்டிருக்கையில் பிரதம மந்திரியின் வீட்டிற்குச் சென்றால் அங்கிருந்து நிறையப் பணம், பெறுமதி மிக்க நகைகளைத் திருடலாம்' என்று கூறினான் மற்றத் திருடன்.

(மிகுதி அடுத்த இதழில்)

- எஸ். ஷர்மினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியைக் கற்ற



கணினிப் பாவனை இன்று பலரினதும் அன்றாட, அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படும் அளவுக்கு வளர்ந்துள்ளது. இன்றைய எமது சமூகத்தின் பெரும்பாலான சிறுவர்கள் கணினியை இயக்கும் வல்லமை பெற்றுள்ளனர். இவர்களுள் பல சிறுவர்கள் இதர அனைத்துப் பணிகளுக்கும் மேலாகக் கணினியைப் பாவிக்கப் பழகிக் கொண்டுள்ளமையைக் காணமுடிகிறது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழி கணினிப் பாவனைக்கும் பொருந்தும் என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இது தொடர்பாக



அமெரிக்கா வித்தியாசமான ஆராய்ச்சியை மேற்கொண்டது. அவ்விடயங்களையே இங்கு நாம் சுட்டிக் காட்டவுள்ளோம்.

'சிறுவர்களுக்குக் கணினி உகந்ததா? இல்லையா?' என்பதே இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும். இங்கு பாலர் பாடசாலைச் சிறுவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். இதில், முதல் பிரிவினருக்குச் சாதாரண பாலர் பாடசாலைக் கல்வி மற்றும் அதற்கு இணையான செயற்பாடுகள் போதிக்கப்பட்டன. இரண்டாம் பிரிவினருக்குக் கணினிப் பயிற்சி வழங்கப்பட்டது. மூன்றாவது பிரிவினருக்கு வழங்கப்பட்டது பியானோ பயிற்சியாகும்.

மூன்று மாதங்களுக்குப் பின்னர் மூன்று பிரிவினரதும் அறிவு வளர்ச்சி பற்றி ஆராயப்பட்ட போது பெறுபேறுகள் ஆச்சரியம் தருவதாக இருந்தன. சாதாரண பாலர் பாடசாலைக் கல்வியைப் பெற்ற பிரிவினரின் அறிவு வளர்ச்சி சாதாரண வேகத்தைக் கொண்டிருந்தது. பியானோ பயின்றவர்களின் அறிவு வளர்ச்சி இரண்டு மடங்காக உயர்ந்திருந்தது. கணித ரீதியான அறிவு வளர்ச்சி நிலையே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன், கணினிப் பயிற்சி பெற்றவர்களின் அறிவு வளர்ச்சி குறைந்த மட்டத்தில் இருந்தமை கண்டறியப்பட்டது. இவ்வாராய்ச்சியானது அமெரிக்காவில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையான உச்ச வளங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.



### அறிவு வளர்ச்சிப் பாதிப்பு

இக்கணினி தொடர்பான ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டது என்னவென்றால் அறிவு வளர்ச்சிக்குக் கணினியை விட, இதர செயற்பாடுகளே காரணம் என்பதாகும். கணினி சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று பார்க்க இயந்திரத்துக்கும், மூளைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கணினி என்பது சூட்சுமமாகவும், வேகமாகவும் சிந்திக்கத் தூண்டும் இயந்திரமாகும். சிறு வயதிலிருந்தே குழந்தைகள் கணினியுடன் இருப்பார்களாயின் அவர்களின் சிந்திக்கும் திறமையில் தேய்வு ஏற்படும். எமது சிந்திக்கும் திறனைப் பின் தள்ளி இயந்திரத்தின் சக்தி முன் செல்வது அதற்குக் காரணமாகும்.



### பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கு அடிமையாதல்

இன்று எமது சிறுவர்கள் பலரும் கணினியால் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்களை மறந்து கணினி விளையாட்டு (கேம்ஸ்)களுக்குப் பழகி இருப்பதனை நாம் அனைவரும் அறிவோம். இவ்விளையாட்டுகளுக்குப் பழகிவிட்ட சிறுவர்கள் மணித்தியாலக் கணக்கில் நேரத்தை வீணடிப்பதுடன் இதிலிருந்து விடுபட முடியாமல் இருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் இவ்விளையாட்டுகளில் ஈடுபட்டு (கண்களுக்கும் பாதிப்பு) உடல் ரீதியானதும், மன ரீதியானதுமான பல பாதிப்புக்களுக்குட்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி இக்கணினி விளையாட்டுக் காரணமாகப் பெற்றோர் குழந்தைகளுக்கிடையே மோதல்களும் ஏற்பட்டுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.



பொதுவாக விளையாட்டுகளின் போது மன நிம்மதி, தர்க்க ரீதியான தன்மை, பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் சவால்களை வெற்றிகொள்ளல் போன்ற நன்மைகள் ஏற்படுகின்ற போதும் இக்கணினி விளையாட்டுக்களால் கிடைக்கும் நன்மை எதுவுமில்லை! ஆகவே, கணினியைப் பாவிக்கும் நீங்கள் அதனை உங்கள் முன்னேற்றத்துக்குப் பாவிக்க வேண்டுமே ஒழிய அழிவை நோக்கி அல்ல என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.



அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ற்றாலும் பழைமையைப் போற்றுவோம்!



ஆராய்ச்சியின் போது கண்டறியப்பட்ட உண்மை என்னவெனில், அமெரிக்காவிலுள்ள வெள்ளையர்களுடைய குழந்தைகளின் அறிவு நிலையுடன் ஒப்பிடுகையில் சீனக் குழந்தைகளின் அறிவு மட்டம் உயர்ந்து காணப்பட்டது. அதற்குக் காரணமாகப் பல மனோதத்துவ நிபுணர்கள் கூறியது, வெள்ளைக்காரச் சிறுவர்கள் கணினி மற்றும் கணிப்பொறி (கல்குலேற்றர்) பாவித்த போதும், சீனச் சிறுவர்கள் பாரம்பரிய உபகரணங்களை இன்றும் பாவிப்பதே. இதற்கு மேலதிகமாகச் சம்பிரதாய பூர்வமான மனனம் செய்யும் முறையிலும் அறிவு வளர்ச்சி ஏற்படும் என நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். சுலோகங்கள், கவிதைகள் போன்றவற்றை மனனம் செய்வதனூடாக வளர்ச்சி ஏற்படும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



குறிப்பாக, இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு இம்முறை பெரிதும் உதவியுள்ளது. இந்தியாவில் வாய்ப்பாடு மனனம் செய்த இந்தியக் குழந்தைகள், அமெரிக்காவுக்குச் செல்லும் போதும் பெற்றோர்களின் உதவியுடன் இவற்றை மனனம் செய்கிறார்கள். ஆகவே, கல்குலேற்றர் பாவனையை விட இம்மனனம் செய்யும் முறை சாலச் சிறந்ததாகும். இதனூடாக அறிவு வளர்ச்சி இடம்பெறும். புராதன காலத்தில் பல நிபுணத்துவமிக்கவர்கள் தோன்றியமையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இம்மனனஞ் செய்யும் முறையினால் அறிவு சார்ந்த துரித வளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது, அத்தனைக்கு இத்தனை என்றால் இத்தனைக்கு எத்தனை? என்ற தர்க்க ரீதியான வளர்ச்சி செயற்படுகின்றது. அத்துடன், இரண்டு வரிகளுக்கு இடையில் காணப்படும் தொடர்பு, மொழிப் பிரயோகம் தொடர்பான பழக்கம் அவ்வளர்ச்சிக்கு மேலும் உந்து சக்தியாக விளங்கும். மனதில் கணக்குப் போடும் திறமையும் இவ்வாய்ப்பாடு மூலம் ஏற்படும். இவ்வாய்ப்பாட்டு முறை இன்றைய நவீன யுகத்துக்கு உகந்ததல்ல எனப் பலர் கூறுகிறார்கள். கிளிப்பிள்ளை போன்று மனனஞ் செய்யும் நிலை எனச் சிலர் கூறுவர். எவ்வாறாயினும் அமெரிக்கா மீண்டும் இன்று இந்த நிலைக்கே திரும்பியுள்ளது. நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் குறிப்பிடத்தக்களவு பாவிக்கும் அமெரிக்கச் சிறுவர்கள் மீண்டும் பாரம்பரியக் கல்வி முறையைத் தழுவியுள்ளனர்.

இவ்வாறு மனனஞ் செய்வதால் எமது மனதில் ஏற்படும் இரசாயனச் செயற்பாடு இன்று விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எமது மூளையில் காணப்படும் நியூரோனுக்கிடையே மிக மெல்லிய இடைவெளிகள் காணப்படுகின்றன. ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதால் அதில் புரோட்டின் சேரும். அதன் மூலம் அங்கு நிலையான வளர்ச்சி இட்டுச் செல்கிறது. சுலோகங்கள், வாய்ப்பாடுகளை மனனஞ் செய்வதாலும் மேற்படி செயலே இடம்பெறுகிறது. எமது சமூகங்களில் புராதன காலம் தொட்டு இம்மனனஞ் செய்யும் முறை இருந்து வந்துள்ளது. சிறு வயதில் எமக்குக் கிடைப்பது மனனஞ் செய்வதால் பெறும் அறிவு மட்டுமே! படிப்படியாக உயர் வகுப்புகளுக்குச் செல்லும் போதுதான் அவற்றின் அர்த்தம் புரிதல் நடைபெறுகிறது. எமது மொழியில் இலக்கண நியதிகள் உயர் வகுப்புகளுக்குச் செல்லும் போதே படிக்க முடிகின்ற போதும் எம்மை அறியாமலே அவை எம்முன் உருவாகி இருப்பது இம்மனனஞ் செய்யும் முறையினாலேயாகும். ஆகவே எமது சிறுவர்கள் புராதன நூல்களை ஒரு முறையேனும் படிக்க வேண்டும்.





### மணல் எழுத்து

இம்முறை புராதன காலம் தொட்டுப் பழக்கத்தில் இருந்து வருகிறது. இதன் மூலம் எழுத்துக்கள் அழகு பெறுவதுடன் அறிவு வளர்ச்சி, சிந்திக்கும் திறமை, படைப்பில் திறமை என்பன வளர்ச்சி பெறுகின்றன. தமிழ் மொழியில் எழுத்துக்கள் சித்திரத்தைப் போன்று அழகானவை. வெளிநாட்டுச் சிறுவர்கள் தமிழ் எழுத்துக்களைப் 'பூக்கள்' எனவும் 'வண்ணத்துப் பூச்சிகள்' எனவும் அழைக்கிறார்கள். இவ்வெழுத்துக்களை அழகாக எழுதுவதன் மூலம் மன வளப்பயிற்சியும் அறிவு வளர்ச்சியும் இடம் பெறும். ஆகவே, உங்கள் எழுத்துக்களை முற்றத்திலோ பலகையிலோ மணலைப் போட்டு அதன் மீது எழுதவும். மேற்படி கருத்துக்கள் மூலம் நாம் கணினியை நிராகரிக்கிறோம் என்று நினைக்கக் கூடாது. கணினிப் பாவனையில் எந்தத் தவறும் இல்லை. ஆனாலும், அவற்றுக்கு மாத்திரம் அடிமையாதல் பின் விளைவுகளை ஏற்படுத்த வல்லது. எந்த விடயத்திலும் ஒரு எல்லை உண்டு. கல்குலேற்றர் இருப்பதால் வாய்ப்பாட்டை நிறுத்துவது முறையல்ல. அறிவு மட்டுமின்றித் திறமை மிகு சிறுவர்களே நாட்டுக்குத் தேவை.



அதற்காக நீங்கள் பாரம்பரிய மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் தேவையைப் பயன்படுத்தும் போதும் நன்றாகச் சிந்தித்துப் பயன்படுத்தவும்.

- எஸ்.ரமேஷ்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து


பெரிய பிரித்தானியத் தீவுகளில் விசாலமான நிலப்பரப்பை கொண்டிருப்பது இங்கிலாந்தாகும். அத்துடன் பிரதான அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் பகுதியும் இதுவே. கிழக்காக வேல்ஸ் நாட்டையும் மேற்காக ஸ்கொட்லாந்தையும் தவிர்ந்த ஏனைய பகுதிகள் யாவும் இங்கிலாந்திற்குச் சொந்தமானவை. இற்றைக்குப் பல வருடங்களின் முன் இங்கிலாந்து சுதந்திர வல்லரசாக விளங்கியது. இதன் காரணமாக இங்கிலாந்து பெரிய பிரித்தானியத் தீவுகளின் அதிகாரத்தையும் தன்னகத்தே வைத்துக் கொண்டது. அதன் பின் பல நாடுகளை இங்கிலாந்து குடியேற்ற நாடுகளாகக் கைப்பற்றி வைத்திருந்தது. இங்கிலாந்து முக்கோண வடிவமுடைய நாடாகும். கிழக்குப் பகுதியில் வட கடல் எல்லையாகவும், மேற்குப் பகுதியில் ஸ்கொட்லாந்து, அயர்லாந்துக் கடல், சென்ஜோர்ஸ் நீரிணை மற்றும் அத்திலாந்திக் கடலையும் எல்லைகளாக கொண்டுள்ளது.




## தரைத்தோற்றம்

இங்கிலாந்தின் மொத்த நிலப்பரப்பு 130,410 சதுரகிலோ மீற்றராகும். இதனுடன் பல சிறு தீவுகளையும் சொந்தமாகக் கொண்டது. பெரிய பிரித்தானியாவின் மற்றப் பகுதிகளை விட உயரமுடையது. இதுவே இங்கிலாந்தின் மிக அழகான பிரதேசமாகக் கருதப்படுகின்றது. வேல்ஸ் பகுதியை நோக்கிய பிரதேசங்களில் தாழ்நிலங்களைக் காணலாம். மறுபுறம் மத்திய மற்றும் கிழக்கு இங்கிலாந்திலும் தாழ்நிலங்கள் உள்ளன. கிழக்குப் பகுதியில் அதிகளவில் சேற்று நிலங்கள் காணப்படுகின்றன.







இங்கிலாந்திற்குரிய பகுதியில் காணப்படும் கடற்கரை சில முக்கிய சிறப்பியல்புகளைக் கொண்டது. செங்குத்தான கடற்கரையோரத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக இவை சிறந்த இயற்கைத் துறைமுகங்களாக உள்ளன. மேலும் இங்கிலாந்தின் உயர் நிலப்பகுதியில் உற்பத்தியாகி வரும் நதிகள் இப்பகுதியில் கடலில் கலப்பதன் காரணமாகக் கழிமுகங்கள் மற்றும் துறைமுகங்கள் உருவாகியுள்ளன.

நாட்டின் வட மற்றும் மேற்குப் பகுதியில் அதிக மலைகளைக் காணலாம். வட இங்கிலாந்திலுள்ள பெனி என்றழைக்கப்படும் மலைத் தொடர் மிக முக்கியமான பகுதியாகக் கருதப்படுகின்றது. தென் பகுதியிலிருந்து வட திசை நோக்கித் தொடர்ச்சியாகச் செல்லும் பெனி மலைத் தொடரின் மிக உயர்ந்த மலை ஸ்கேபெல் பைக் எனறழைக்கப்படும். மலை 978 மீற்றர்

## காலநிலை

சுற்றி வரக் கடலைக் கொண்டிருப்பன் காரணமாக மாறுபடும் வெப்பநிலையைக் கொண்டுள்ளது. மேலும் இதமான காலநிலையைக் கொண்டுள்ள நாடாக இங்கிலாந்தைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக அதிக குளிரையோ அல்லது அதிக வெப்பத்தையோ இங்கு காணமுடியாது.




சாதாரணமாக நாட்டின் தென் பகுதியில் சராசரி வருட வெப்பநிலை 11 பாகை செல்சியஸாக இருக்கின்றது. வட கிழக்கில் 9° பாகை செல்சியஸாக வெப்பநிலை காணப்படுகின்றது.

ஜுலை மாதத்தில் வெப்பநிலை அதிகமாகவும் ஜனவரி மாதத்தில் குளிர் அதிகமாகவும் காணப்படும். ஜனவரி மாதத்தில் வெப்பநிலை 4 பாகை செல்சியஸாகக் காணப்படும். பிரதேசத்திற்குப் பிரதேசம் வெப்பநிலையில் வேறுபாடு காணப்படுகின்றது. ஒக்டோபர் மாதம் கூடிய மழை கிடைக்கின்றது. சராசரி வருட மழைவீழ்ச்சி 760 மில்லி மீற்றாக இருப்பதோடு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டும் செல்கின்றது.

## இயற்கை வளங்கள்

விவசாய நடவடிக்கைக்குத் தேவையான வளமான மண் இங்கிலாந்தில் காணப்படுகின்றது. இதனை விடக் கனிய வளமான உயர் ரக இரும்புப் படிவுகள் இங்கிலாந்தின் கிழக்குப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. மேலும் கும்பிரியா, ஸ்போர்ட்ஷயர் போன்ற பிரதேசங்களிலும் இரும்புப் படிவுகள் அதிகமாக உள்ளன.

## தாவரம்-விலங்குகள்

நீண்ட காலங்களிற்கு முன்பு மிகப் பெரிய காடுகளை இங்கிலாந்து கொண்டிருந்தது. தற்போது இவை அழிக்கப்பட்டு 8%மான காடுகளே உள்ளன. இக்காடுகளில் ஓக் மற்றும் பீச் வகையிலான மரங்கள் உள்ளன. மலைத் தொடரை அண்டிய பகுதிகளில் பைன் மற்றும் பிரிச் வகை மரங்கள் வளர்ந்துள்ளன. செரி மற்றும் அப்பிள் பழ மரங்களை அதிகமாகக் காணலாம். பல இனப் பறவைகள் மற்றும் பாம்பு வகைகள் இங்கு அதிகமாக உள்ளன.

(தொடரும்)

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ அக்கா

'ஆ..... குட்டி வண்ணாத்தியே...... இன்றைக்கும் நீ காலையிலேயே வந்துவிட்டாயா......?'

'ஆமாம்...... தேனீயே, பூ அக்காவையும் பார்த்து விட்டு வரலாம் என்றுதான் இந்தப் பக்கமாக வந்தேன்!'

'ம்.... அது நல்லது தான்'

அந்த அழகிய பூந்தோட்டத்தின் மத்தியிலிருந்தவாறு வண்ணாத்தியும், தேனீயும் தான் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தன. இத்தனை அழகான பூந்தோட்டத்தை உருவாக்கியவர்தான் 'பூ அக்கா' என்பவர். இவர் மிகவும் கஷ்டப்பட்டு அழகழகாகப் பூமரங்களை இத்தோட்டத்திற்குக் கொண்டு வந்து நட்டுப் பூந்தோட்டத்தை அழகுபடுத்தி வந்தார். இதனால் தோட்டத்தில் பூக்கள் பூத்துக் குலுங்கின. வாசம் பரப்பின. வண்ணாத்திப் பூச்சிகளும், தேனீக்களும் இந்தப் பூக்களில் தேன் பருகுவதற்காகத் தினமும் பூந்தோட்டத்திற்கு வந்து செல்வதுண்டு. பூ அக்காவின் இந்தப் பூந்தோட்டத்தில் நிறையப் பயனடைவதனால் வண்ணாத்திப் பூச்சிகளும் தேனீக்களும் சேர்ந்துதான் அவருக்குப் 'பூ அக்கா' எனப் பெயர் வைத்தன.

பூந்தோட்டத்திற்கு வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தது. பூக்களில் தேன் பருகவும், அங்கிருந்த நீர்த்தடாகத்தில் நீராடவும் ஏராளமான பறவைகள், தேனீக்கள், வண்ணாத்திப் பூச்சிகள் எனப் பல படையெடுத்து வந்தமையால் பூ அக்கா மிகவும் பிரபல்யம் பெற்றவரானார்.

இப்படி இருக்கையில் காலப்போக்கில் இந்தப் பூந்தோட்டத்தில் பூக்கின்ற அழகிய பூக்கள் எல்லாம் மாயமாய் மறையத் தொடங்கின. பூ அக்கா அதிகாலையில் பூந்தோட்டத்திற்கு வரும்போது அங்கிருந்த பூக்கள் அனைத்தையும் யாரோ பறித்துக் கொண்டு போயிருப்பதைக் கண்டார். மரக்கிளைகளும் கண்டபடி வெட்டப்பட்டிருப்பதையும் அவர் கண்டார். இச்சம்பவம் தினசரி நடக்கும் சம்பவமாகி விட்டது. இதனால் பூந்தோட்டம் அழகு மங்கிக் காணப்பட்டது. தேனீக்களும், வண்ணாத்திகளும் தேன் பருகுவதற்கு வழியின்றிப் பெரிதும் கஷ்டப்பட்டன. இந்நிலையை எண்ணிப் பூ அக்காவும் மிகவும் கவலைப்பட்டார்.

எனவே, பூ அக்கா மீண்டும் தனது அயரா முயற்சியினால் இன்னும் சில பூ மரங்களைக் கொண்டு வந்து நட்டார். பூ அக்காவின் முயற்சியையிட்டு எல்லோரும் மனதாரப் பாராட்டின. இந்நிலையில் தேனீக்களும் வண்ணாத்திகளும் ஒன்றிணைந்து கூட்டமொன்றைக் கூட்டினர். பூந்தோட்டத்தின் பூக்களைக் களவாடிச் செல்வதை அறிந்து பூத் திருடரைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க வேண்டும் என அவை முடிவெடுத்தன.

அவற்றின் திட்டத்தின் படியே பூக்களைத் திருடியவனைக் கண்டுபிடித்தன!



பக்கத்து ஊரிலுள்ள 'ஐயர்கண்ணு' என்பவரே இவ்வாறு பூக்களைத் தினமும் அதிகாலை நேரத்தில் வந்து களவாடி அவற்றை விலைக்கு விற்று வருகின்றார் என்பதை அவை கண்டு பிடித்தன.

தேனீக்களும்,வண்ணாத்திப் பூச்சிகளும் ஐயாகண்ணுவைக் கையும்மெய்யுமாகப் பிடித்து நல்லதொரு பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என ஓரிடத்தில் மறைவாக ஒளிந்திருந்தன. எதிர்பார்த்தது போலவே அன்றும் ஐயாகண்ணு அதிகாலையில் பூந்தோட்டத்திற்கு வந்து 'முட்டாள் பூ அக்கா இன்னுமின்னும் பூ மரங்களை நடுகிறார். அது எனக்குத்தான் நல்லது. ஹிஹி..... எனது வியாபாரம் 'ஜாம் ஜாம்' என நடக்கட்டும் ஹி...ஹி...'' என ஐயாகண்ணு முணுமுணுத்தபடி பூக்களைக் களவாகப் பறிக்க முயன்றார். அப்போது ஒரே வீச்சில் தேனீக்கள் அனைத்தும் ஐயாகண்ணுவை மொய்த்துக் கொண்டு அவரைக் கொட்டத் தொடங்கின. ஐயாகண்ணுவோ செய்வதறியாது அங்குமிங்குமாக ஓடப் பார்த்தார். ஆனால் தேனீக்களோ விடுவதாக இல்லை. துரத்தித் துரத்திக் கொட்டின உடம்பெல்லாம் காயப்பட்ட நிலையில் சோர்ந்து போய் நிலத்தில் விழுந்தார் அவர். அப்போது அவ்விடத்திற்கு வந்த பூ அக்கா 'நண்பர்களே இந்தப் பெரியவருக்கு ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?' எனக் கேட்டார்.

'பூ அக்கா, பூ அக்கா..... இவர்தான் நமது தோட்டத்திலுள்ள பூக்களைத் தினமும் திருடிச் சென்றவர். நாங்கள் எல்லோரும் சேர்ந்து இவரைப் பிடித்து விட்டோம்' என அவை கூறின.

அதற்குப் பூ அக்கா ''நண்பர்களே, யாரையும் நாம் சித்திரவதை செய்யக்கூடாது. அது கூடாத பழக்கம். இவர் திருட்டு வேலை செய்திருந்தால் இயற்கை அவருக்கு உரிய தண்டனையைக் கொடுக்கும்... நாம் அதைச் செய்யக் கூடாது. பாவம் அவரை விட்டுவிடுங்கள்.....'' என ஐயாகண்ணு மீது அனுதாபப்பட்டார் பூ அக்கா.

தேனீக்களும், பூ அக்காவின் பேச்சைக் கேட்டு ஒதுங்கிச் சென்றன. இதன் பின்னர் ஐயாகண்ணு தனது தவறை உணர்ந்து, தனது செய்கைக்காக மிகவும் வருந்தினார். தன்னை மன்னித்து விடும்படியும் அனைவரிடமும் கேட்டார்.

தவறு செய்வோரை மன்னித்து அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு வழங்குவது கெட்டவர்களை நல்லவர்களாய் மனம் திருந்தச் செய்வதற்கு வழங்கப்படும் ஒரு வாய்ப்பாகும்.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 541
சி.டிலக்ஷன், தரம் - $10^{A}$, வவுனியா த.ம.வி, வவுனியா.


அங்.இல : 542
எம்.ஏ.றிஹானா, தரம் - 13 (கலை), அக்/அல் ஹம்றா ம.வி, அக்கரைப்பற்று.


அங்.இல : 543
எஸ்.ஸ்டீவ், தரம் - $8^{B}$, இரத்மலானை இந்துக் கல்லூரி, இரத்மலானை.


அங்.இல : 544
எஸ்.சற்குணதேவி, தரம் - 10, மன்/சித்தி விநா.இ.க, மன்னார்.


அங்.இல : 545
இ.குமுதினி, தரம் - 12, கௌரவில்ல த.ம.வி, சாமிமலை.


அங்.இல : 546
ரா.திவ்யா, தரம் - $7^{B}$, பது/தமிழ் மகளிர் ம.வி, பதுளை.

விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 547
கே.ஜனகசிவசுதன், தரம் - $12^{B}$, கிளி/பளை ம.க, பளை.


அங்.இல : 548
எல்.எம்.அஸ்பானி, தரம் - $9^{B}$, கே/பாபுல் ஹசன் ம.ம.வி, வரக்காபொல.


அங்.இல : 549
எக்ஸ்.சிந்துஜா, தரம் - 10, மு/மல்லாவி ம.கல்லூரி, யோகபுரம்.


அங்.இல : 550
மு.சப்றாஸ், தரம் - $10^{A}$, மட்/காங்கேயனோடை அல் அக்ஸா ம.வி, ஆரையம்பதி.


அங்.இல : 551
ம.கயூரன், தரம் - 10, யா/அல்லாரை அ.த.க.வி, அல்லாரை.


அங்.இல : 552
ஏ.எஸ்.எம்.நாஸிக், தரம் - $10^{I}$, சாஹிரா தேசிய பாடசாலை, புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்






| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| සැම | | ஸැம | எல்லா |
| | සැ | Sand = ස‍ැ | |
| ගෙදරකම | | ගෙදරகம | வீடுகளிலும் |
| | ගෙ | Get = ගෙ | |
| | ද | The = ද | |
| ලැබේ | | ලැබේ | காணப்படும் |
| | ලැ | Lab = ලැ | |
| | බේ | Basin = බේ | |
| ගෙය | | ගෙய | வீடு |
| | ගෙ | Get = ගෙ | |
| පිරිසිදු | | பிரிசி du | சுத்தம் |
| | දු | பந்து | |
| දැන් | | දැன் | இக்காலத்தில் |
| | දැ | That = දැ | |
| භාවිත කරයි | | භාவிதாகறய் | பாவிக்கிறார்கள் |
| | භා | Bata = බා | |
| මිටක් | | மிටக் | பிடி |
| | ට | பட்டம் ශ්‍රී ට | |

## தும்புத்தடி பற்றிய வாக்கியங்கள் சில





1. සැම ගෙදරම කොස්ස දකින්නට ලැබේ.
ஸැம ගෙදறம கொஸ்ஸ දකின்னට ලැබේ.
எல்லா வீடுகளிலும் தும்புத்தடியைக் காணலாம்

2. ගෙය පිරිසිදු කිරීමට කොස්ස අවශ්‍යයි
ගෙய பிரிஹிදු கிறீமට கொஸ்ஸ அவஸ்யய்
வீட்டைச் சுத்தம் செய்வதற்குத் தும்புத்தடி அவசியம்

3. කොස්ස කොහුවලින් සාදනවා
கொஸ்ஸ கொஹுவலின் சாදனவா
தும்புத்தடியைத் தும்பால் செய்வார்கள்

4. දැන් ප්ලාස්ටික් කෙඳි ද භාවිත කරනවා
දැன் ப்ளாஸ்டிக் கொஹுද භவிதா கறனவா
இப்பொழுது பிளாஸ்ட்டிக் நார்களையும் பாவிக்கிறார்கள்

5. කොස්සට මිටක් තියෙනවා
கொஸ்ஸට மிටக் தியெனவா
தும்புத்தடிக்கு ஒரு பிடி உண்டு

### කියවීම கியவீம - வாசிப்பு

| | |
|---|---|
| කො | කොස්ස |

| | | |
|---|---|---|
| කො | ස් | ස |
| கொ | ஸ் | ஸ |

### අභ්‍යාසය
### கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்

උදා:- ____ ස්ස
කොස්ස



1. කො ____ ස
2. කොස් ____
3. ____ ගෙය පිරිසිදු කිරීමට ගන්නවා
4. ____ කොහුවලින් සාදනවා

කො


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# சதாம் சத்தியாக்கிரகம்



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசேன் உட்பட அவருடன் குற்றம் சுமத்தப்பட்ட ஏழு பேரும் சத்தியாக்கிரகம் இருந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு எதிரான வழக்கை விசாரித்து வருகின்ற நீதிமன்றம் சட்டபூர்வமானதல்ல எனவும், இந்நீதிமன்றம் தம்மைக் கொடூரமாக நடத்துவதாகவும் தெரிவித்தே இவர்கள் இவ்வாறு சத்தியாக்கிரகம் இருந்து வருவதாக இவர்கள் சார்பாக வாதாடி வருகின்ற காமிஸ் அல் மெயிதி என்ற வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். தமது வழக்கை விசாரிப்பதற்குக் கடும் போக்குடைய நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டதை எதிர்த்துக் கடந்த ஜனவரி 29 ஆம் திகதியன்று நீதிமன்றத்திலிருந்து சதாம் வெளியேறியிருந்தமையும், இதன் பின்னர் அவர் நீதிமன்றம் வர மறுத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் மற்றுமொரு அடையாள எதிர்ப்பாகவே சதாம் ஹுசேன் தற்போது சத்தியாக் கிரகத்தை மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

1982 ஆம் ஆண்டில் சதாம் ஹுசைனைச் சிலர் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதனைத் தவிர்க்கும் பொருட்டு 140 பேரை துஜாயினி என்ற நகரில் வைத்துச் சதாம் கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

# பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்!



பாகிஸ்தானின் ஜனாதிபதி பர்வஷ் முஷாரப் ஜனாதிபதிப் பதவியையும், இராணுவத் தளபதிப் பதவியையும் சமகாலத்தில் வகிப்பது தவறான செயல் என்று பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகமான டொன் மெக்கினன் தெரிவித்துள்ளார். இவ்வாறு இரு பதவிகளையும் வகிக்காமல் ஏதேனும் ஒரு பதவியை மட்டும் முஷாரப் வகிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாகிஸ்தானின் சமீபத்திய நிலவரங்களைப் பொதுநலவாய நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், 2007 ஆம் ஆண்டிற்குள் முஷாரப் ஏதேனும் ஒரு பதவியை விட்டுக் கொடுத்தல் வேண்டும் என அங்கத்துவ நாடுகள் அபிப்பிராயம் தெரிவிப்பதாகவும், உரிய காலத்திற்குள் இதில் மாற்றம் நிகழவில்லையென்றால் இது குறித்து அங்கத்துவ நாடுகள் கலந்துரையாடிப் பொது அமைப்பில் உத்தியோபூர்வமாகப் புகார் செய்யப்படும் எனவும் பாகிஸ்தானுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தென்கொரியாவும் போட்டி!




ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்குத் தாமும் போட்டியிடப் போவதாகத் தென் கொரியா அறிவித்துள்ளது. இதன்படி தென் கொரியாவின் வெளிவிவகார அமைச்சரான கான்கீமூன் என்பவரை இப்பதவிக்கு போட்டியிடச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் தற்போதைய செயலாளர் நாயகமான கொபி அனானின் 5 வருட பதவிக்காலம் இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமையினால், அடுத்ததாக மேற்படி பதவிக்கு யாரை நியமிப்பது என்றவோர் கேள்வி எழுந்துள்ள நிலையிலேயே தென் கொரியாவின் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

2004 ஆம் ஆண்டின் போது தென் கொரியாவின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட கான்கீமூன் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரை ஐ.நாவுக்கான தென் கொரிய நாட்டின் பிரதிநிதியாகக் கடமையாற்றியுள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இம்முறை ஐ.நா செயலாளர் பதவியானது ஆசிய நாடொன்றிற்கே வழங்கப்படல் வேண்டும் என்பதற்கேற்பத் தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளும் இப்பதவிக்குப் போட்டியிடுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிய மாணவர்களுக்காகக் காத்திருக்கும் பிரிட்டன்!



இந்தியாவின் திறமைசாலி யான மாணவர்களுக்குத் தமது நாட்டில் பல்கலைக்கழக அனுமதி மற்றும் மேற்படிப்புக்களை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவதற்குப் பிரிட்டன் மிகுந்த ஆர்வம் காட்டுவதாக 'தி இன்டிபென்டன்ட்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பிரிட்டனின் 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான 'கிரைஸ் பெட்டன்' என்பவர் இப்பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றின் போதே இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனை விட அமெரிக்காப் பல்கலைக்கழகங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு மாணவர்கள் மேற்படிப்பை மேற்கொண்டு வருவதாகக் கணக்கெடுப்புக்கள் காட்டுகின்றன. அதாவது பிரிட்டனில் இந்திய மாணவர்கள் 17,000 பேர் வரையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கற்று வருகின்ற அதேவேளை, அமெரிக்காவில் 80,000 இந்திய மாணவர்கள் கற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் வருடாந்தம் பலவிதமான புலமைப் பரிசில் திட்டங்கள் இருப்பதன் காரணமாகவே இவ்வாறு அதிக எண்ணிக்கையிலானோர் அங்கு செல்வதற்கான காரணமாகவும் அமைந்துள்ளது.

குறிப்பாக இலங்கை உட்பட ஆசிய நாட்டவர்கள் பலரும் இவ்வாறே தான் அமெரிக்காவில் மேற்படிப்பை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர். எனவே, இது விடயத்தில் அமெரிக்காவுடன் போட்டியிட வேண்டிய நிலைக்குப் பிரிட்டன் ஆளாகியிருப்பதன் காரணத்தினாலேயே புதுப்புதுத் திட்டங்களினூடாகத் தமது நாட்டிற்கு மாணவர்களை அழைப்பதில் பிரிட்டன் அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்தப் போட்டி நிலைமையானது ஆசிய நாட்டு மாணவர்களுக்கு நன்மை பயப்பதாக அமையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 36

கேள்வி: ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள்?

சரியான விடை :..............................

உங்கள் விடையுடன்– பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 36,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

## போட்டி இல - 34 இன் சரியான விடை :- [illegible]

**பரிசு பெறுவோர்**

சு.அபிலாஷ், தரம் - 8^C,
கொ/இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.

ஏ.புஸ்பவள்ளி, தரம் - 11,
களு/சாந்தமேரி ம.வி, மத்துகமை.

எஸ்.ஸபியா, தரம் - 10^A,
உடுநுவர பாத்திமா பாலிகா மு.ம.வி, கெலிஓய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளி ஜோசியம்



**நிமலியைக் கண்டதும் கிளிகள் இரண்டும் விக்கி விக்கி அழுதன. வீட்டில் நடந்து கொண்டிருப்பது, காட்டிலே சிக்கித் தவிப்பது எல்லாவற்றையும் நிமலியும், கிளிகளும் பரிமாறிக் கொண்டன. நினைவு தெளிந்த நிமலியும், நண்பர்களும் வீட்டுக்குப் போவதற்கு அவதிப்பட்டனர்**

நிமலியின் உற்ற நண்பர்களான அந்தப் பஞ்சவர்ணக் கிளி ஜோடிகள், அவளும் தம்பியும் காட்டுக்குப் போன நாளிலிருந்து மிகுந்த கவலையுடனேயே காணப்பட்டன. நிமலி வரத் தாமதமான ஒவ்வொரு நாளும் கிளிகளின் பிரிவுத்துயர் கூடிக் கொண்டே போனது. இப்போது உச்சக்கட்ட வேதனையில் முகம் வாடிக் கூனிக்குறுகிச் சோபை இழந்து காணப்பட்டன. ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை, பாடுவதில்லை. கதை சொல்வதில்லை. தின்னக் கொடுத்த பழங்கள் கூட அப்படியே இருந்தன. இரண்டு கிளிகளும் நிமலி போன நாளிலிருந்து அவளது வருகையை எதிர்பார்த்து அவள் போன திசையையே கூட்டின் வலைப்பின்னலூடாக வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தன. நிமலி ஒருநாளும் கிளிக்கூட்டை மூடுவதில்லை. அவை சுதந்திரமாகப் பறந்து திரிய எதுவித காட்டுப்பாடும் இல்லை. நிமலி வீட்டிலில்லாத நேரத்தில் மட்டுமே அக்கிளிகள் வெளியே பறந்து சென்று ஆனந்தமாயிருந்து விட்டு வருவது வழக்கம். நிமலி காட்டுக்குப் போன நாளிலிருந்து அக்கிளிகள் வெளியே போகாமல் கூட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தன.

நிமலியும் நண்பர்களும் வீட்டுக்குத் திரும்பி வராததையும் வீட்டாரும் மற்றவர்களும் அதனாற்படும் அவஸ்தைகளையும் கிளிகள் கவனித்தன. அவற்றிற்கும் இருப்புக் கொள்ளவில்லை. பொழுது விடிந்ததும் விடியாததுமாகக் கூட்டை விட்டு வெளியேறினால் பொழுது புலரும் போதுதான் கூட்டிற்குத் திரும்பி வருவதாயிருந்தன. அவை நிமலியையும் மற்றவர்களையும் தேடித்தான் காட்டுக்குள் தினமும் போய் வருகின்றன என்பதை எல்லோருமே உணர்ந்திருந்தனர். அவற்றின் நடவடிக்கைகளையும் அவதானித்தபடியிருந்தனர்.

இரண்டு நாட்களாக அந்த ஜோடிக்கிளிகள் கூட்டுக்கு வரவில்லை. மறுநாள் மாலை நேரம் வந்து கூட்டுக்குள் மிக அமைதியாகத் தங்கி விட்டுப் பொழுது புலருமுன்னமே அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டன. காட்டுக்குள் புகுந்த அவை மேலாகவும் கீழாகவும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி ஆங்காங்கே சந்தித்த தங்களது நண்பர்கள் பலரிடமும் இது விடயமாக விபரம் கூறி அவைகளும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டின.

அக்கிளிகள் வீடு திரும்பும் வேளையில், நட்டநடுக்காட்டிலே ஒரு சிறு வட்டக்குளக்கரையில் சிறுமியொருத்தி தண்ணீர்ப் போத்தலில் நீர் அள்ளுவதை அவதானித்தன. கண்களை அகல விரித்துச் செட்டைகளைப் படபடவென அடித்து ''நிமலி நிமலி'' என்று கூவியபடி அச்சிறுமி நிற்கும் இடத்தை அடைந்தன. ஆனால் அங்கே நிற்பது நிமலி அல்ல ஹன்ஸா! என்றாலும் சிறுவர்கள் இருக்குமிடத்தைக் கண்ட மகிழ்ச்சியில் இருந்தன கிளிகள். 'ஹிஹ்ஹீ....... ஹிஹ்ஹீ' எனக் சிரித்து மகிழ்ந்தன. ஹன்ஸாவைச் சுற்றிப் பலமுறை வட்டமிட்டுப் பறந்தன. இதென்ன இந்தக் கிளிகளுக்குப் பைத்தியமாக்கும் என்றெண்ணினாள் ஹன்ஸா. கிளிகள் தொடர்ந்தும் 'ஹிஹ்ஹீ' போட்டபடி 'குட் ஈவினிங் ஹன்ஸா நங்கி, கோ அபே நிமலி அக்கே!' என்று கேட்ட போதுதான் அடடே, இவை நிமலி வீட்டுக்கிளிகள், நம்மைத் தேடி வந்துள்ளன என்ற விஷயம் அவளுக்குப் புரிந்தது. அவளும் கை கொட்டிச் சிரித்தாள். மேலும் கீழும் துள்ளினாள்.

நிமலி இருக்கும் மரத்தடிக்குக் கிளிகளைக் கூட்டிப் போனாள். நிமலியைக் கண்டதும் கிளிகளிரண்டும் மகிழ்ச்சியடைந்தன. வீட்டில் நடந்து கொண்டிருப்பது, காட்டிலே சிக்கித் தவித்தது எல்லாவற்றையும் நிமலியும் பிள்ளைகளும் கிளிகளுடன் பரிமாறிக் கொண்டன. நினைவு தெளிந்த நிமலியும் நண்பர்களும் வீட்டுக்குப் போவதற்கு அவதிப்பட்டனர். ஆனால் பாதை தெரியவில்லை. சோர்வுற்றுக் களைப்புற்ற அவர்களால் நீண்ட தூரம் நடக்க முடியாமலுமிருந்தது. கிளிகளும் இரவாகி விட்டதால் அங்கேயே தூங்கிக் கிடந்தன. அழுத கிளிகளை நிமலி தடவிக் கொடுத்தாள். அன்று இரவு உணவாக இலந்தைப் பழங்களை நிமலியே கிளிகளுக்கு ஊட்டி விட்டாள்.

விடிந்தும் விடியாததுமாகக் கிளிகள் புறப்பட அவதிப்பட்டன. நிமலி ஒரு துண்டில் விடயங்களை எழுதிச் சுற்றிக்கட்டி அதனைக் கிளிகளின் கழுத்துகளிலே தொங்கவிட்டாள். 'பயப்படாதே அக்கே, நாங்கள் எப்படியும் தாத்தேயிடம் கடிதத்தைத் கொண்டு போய்க் குடுப்பம். நாளைக்கே எல்லோரோடையும் நாங்க வாறோம்' என்று கூறிய ஆண்கிளி தனது சோடியிடம் 'கிச்சுஜூஜி, ஜச்சு மஜ்ஜோ' என்றது. 'பாதைகளைக் கவனிச்சுக்கோ' என்பது அதன் அர்த்தம். அவை பறந்து கொண்டே 'வரேங் நிமலி' என்றவாறு உயர எழுந்து சரிந்து பறந்து வானத்துள் புகுந்து மறைந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் பரிசுத்த பூமியில்..



இற்றைக்கு நான்காயிரம் வருடங்களுக்கு முன்பு ஐரோப்பாவின் பிரதான நதிகளான றைன் மற்றும் டன்யூப் நதிக்கரையோரங்களில் பல இனமக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் இந்து-ஐரோப்பிய இன மக்களால் உருவான பழங்குடியினர் முக்கியானவர்களாக இருந்தனர். இப் பழங்குடியினர் ஆயிரக் கணக்கான வருடங்களாகத் தமது தொழில்களாக மிருக வளர்ப்பையும், விவசாயத்தையும் செய்து வந்தனர். எப்படியிருந்த போதும் அவர்களது விவசாய நடவடிக்கைகள் அவ்வளவு வெற்றிகரமாக அமையவில்லை.

இந்த இனத்தவர்களின் விவசாய நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையாத காரணத்தால் இவர்கள் ஒவ்வொரு இடமாக நாடோடிகளாகத் திரிந்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் விவசாயத்தை மேற்கொள்ளக் கூடிய வளமான மண்ணுள்ள நிலங்களைத் தேடித் தென் பிரதேசத்தை நோக்கி இடம் பெயர்ந்தனர். இவ்விதம் தென் பகுதி நோக்கி இடம் பெயர்ந்த மக்கள் இறுதியில் கிரேக்க நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். அங்கு மேகங்களுக்கு மத்தியில் தலையை மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் 'ஒலிம்பஸ் மலை'யைக் கண்டு ஆச்சரியமடைந்து, இம்மலையில் தெய்வம் இருப்பதாக நினைத்தார்கள்.
தொடர் மலைகள் இருந்தபடியால் பள்ளத்தாக்குகளும் அதிகமாகக் காணப்பட்டன. இப்பள்ளத்தாக்குகளுக்கிடையில் சமவெளிகளும் இருந்தன. இந்நிலங்கள் அத்தனை வளமான பகுதிகளாக இல்லாதிருந்த போதும் றைன்-டன்யூப் நதிக் கரையோரங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் இப்பிரதேசங்களைத் தமது இருப்பிடங்களாக மாற்றியமைக்க முடிவு செய்தனர். இதன் விளைவாகப் பல மொழிகள் பேசும் பழங்குடியினர் கிரேக்கத்தில் குடியேறினர். நாடோடிகளாக வந்த இவ்வினத்தவர்கள் தாம் தேடிக் கொண்ட இப்பிரதேசத்திற்குக் 'ஹேலிஸ் தெய்வத்தின் இருப்பிடம்' எனப் பெயரிட்டனர். இவர்களிடையே வாழ்ந்த, வில்வித்தையில் சிறந்து விளங்கிய பழங்குடி இனமக்கள் ஆர்கோலியஸ் பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியேறியதோடு அப்பிரதேசத்தை விருத்தி செய்யக் கூடிய பணிகளிலும் ஈடுபட்டனர்.



1. சிறிது காலம் செல்கையில் கிரேக்க நாடு சிறு சிறு இராச்சியங்களாகப் பிளவுபட்டுப் போனது. ஒவ்வொரு இராச்சியமும் பிரதான நகர் ஒன்றைச் சுற்றியே எழுப்பப்பட்டிருந்தது. பிரதான நகர் பெரிய மதில் ஒன்றாலும் மற்றும் கோபுரம் ஒன்றாலும் பாதுகாக்கப்பட்டிருந்தது. நகருக்கு வெளியே விவசாய நிலங்கள் இருந்தன. விவசாயிகள் மற்றும் நகரவாசிகள் இவ்விவசாய நிலங்களில் வேலை செய்தனர். இவர்களில் சில விவசாயிகள் அடிமைகளாக வேலை பார்த்தனர். அடிமைகளில் பலர் யுத்தங்களின் போது சிறைபிடிக்கப்பட்ட எதிரிப் படை வீரர்களாக இருந்தனர்.



2. கிரேக்க நாட்டிலிருந்து பல முக்கிய நகர்கள் மலையுச்சிகளிலேயே அமைக்கப்பட்டிருந்தன. ஏதென்ஸ், திபெஸ், கொரிந்த மற்றும் ஸ்பார்டா என்பன பலம் வாய்ந்த நகர்களாக இருந்தன. இந்நகர்கள் மதிற் சுவர்களால் சுற்றிவரப் பாதுகாக்கப்பட்டிருந்ததன் காரணமாகச் சுத்தமான குடி தண்ணீரைப் பெற மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர். இதன் காரணமாகத் தொற்று நோய்கள் விரைவில் பெருகின. அத்துடன் உணவுப் பற்றாக்குறை மற்றும் சுத்தமற்ற நீர் காரணமாக அடிக்கடி நகரின் மத்தியில் கலவரங்கள் உருவாகின. இவற்றில் அதிகமானவை குடிப்பதற்குத் தேவையான சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்படும் சண்டைகளாகவே இருந்தன.



3. சகல நகர்களினதும் மிக உயர்ந்த இடத்தில் வணக்கத்தலங்கள் அமைந்திருந்தன. சாதாரண குடிமக்கள் அடிக்கடி இவ்விடங்களுக்கு வருவதைத் தடை செய்வதற்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தமக்கோ அல்லது தமது நகருக்கோ கெடுதல்கள் ஏற்படாமல் தடுக்கத் தமது தெய்வங்களுக்கு ஆராதனை செய்யப் பலர் இவ்வணக்கத் தலங்களுக்கு வருகை தருவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தனர். தெய்வங்களுக்கு ஆராதனை செய்யும் போது இனிமையான பழவகைகளைச் சமர்ப்பணம் செய்ததோடு ஆட்டுக்குட்டிகள்,பன்றிகள், செம்மறியாடுகள், மாடுகள் என்பனவற்றையும் பலியிட்டனர்.

எதிர்பாருங்கள்!

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க.........

தமிழில் கணினி, தகவல் தொழில்நுட்ப மாதாந்த சஞ்சிகை


மார்ச் மாதம் தொடக்கம் வெளிவருகிறது!

இது விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

wijeya newspapers
helping shape opinion

Digitized by Noolaham Foundation.

# சாஃப் போட்டிகளே அடுத்த இலக்கு



கொழும்பில் நடைபெறவுள்ள 10 ஆவது தெற்காசிய விளையாட்டுப் (சாஃப்) போட்டிகளே தனது அடுத்த இலக்கு என இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்ஹ தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டின் மக்கள் முன்பாக இப்போட்டியில் கலந்து கொள்வது, தான் செய்த பாக்கியம் எனவும் இதில் தங்கப் பதக்கங்களை வெற்றி கொள்வதே தனது குறிக்கோள் எனவும் சுசந்திகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மார்ச் 15 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெறவுள்ள 18 ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குச் சுசந்திகாவை இலங்கை மெய்வல்லுனர் சங்கம் தேர்ந்தெடுக்கவில்லை. தேர்வுப் போட்டிகளில் கலந்து கொள்ளாததன் காரணத்தினாலேயே அவர் மெல்போர்ன் செல்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

ஆனால் இது குறித்துக் கருத்துக் கூறியுள்ள சுசந்திகா, தனது அமெரிக்கப் பயிற்றுனரான டோனி கெம்பலின் ஆலோசனைக்கு அமையவே இப்போட்டிகளுக்குச் செல்வதைத் தாம் தவிர்த்ததாகவே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தேர்வுப் போட்டிகளில் கலந்து கொள்ளாமைக்காகத் தன்னைப் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யாததையிட்டுத் தனது அதிருப்தியைச் சுசந்திகா தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்

எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி மெல்போர்ன் நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளில் கலந்து கொள்வதற்கென இலங்கை சார்பாக 8 வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஓட்ட வீராங்கனை தமயந்தி தர்ஷா தலைமை தாங்கவுள்ளார்.

இப்போட்டிகளுக்கெனத் தெரிவாகியுள்ள இலங்கை வீரர்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| தமயந்தி தர்ஷா | (200 மீற்றர்-மகளிர்) |
| ஆன் மஹேஷி சில்வா | (ஈட்டி எறிதல்-மகளிர்) |
| மஞ்சுள குமார | (உயரம் பாய்தல்-ஆண்கள்) |
| பிரசன்ன அமரசேகர | (200மீற்றர், 400 மீ, 100 X 4 மீ-ஆண்கள்) |
| ரொஹான் பிரதீப்குமார் | (400 X 4 மீற்றர்-ஆண்கள்) |
| ரோஹித புஷ்பகுமார | (400 X 4 மீற்றர்-ஆண்கள்) |
| எஸ்.எம்.வீரசூரிய | (400 X 4 மீற்றர்-ஆண்கள்) |
| எஸ்.ஜி.வல்கம்பாய | (400 X 4 மீற்றர்-ஆண்கள்) |
| கீதா நந்தனி | (நடத்தல்-மகளிர்) |

# இந்தியா-இங்கிலாந்து போட்டித் தொடர்கள்!

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்கள் மார்ச் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கென இங்கிலாந்து அணி ஏற்கனவே பெப்ரவரி 12 ஆம் திகதியே இந்தியாவிற்குச் சென்றுவிட்டது. கால அட்டவணையின் படி, முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 1 ஆம் திகதியும், முதலாவது ஒருநாள் போட்டி மார்ச் 28 ஆம் திகதியும் நடைபெறும். போட்டிக்கான கால அட்டவணை பின்வருமாறு:

| | |
|---|---|
| ★ டெஸ்ட் போட்டிகள் | மார்ச் 1-5 - 1ஆவது டெஸ்ட் (நக்பூரில்) |
| | மார்ச் 9-13- 2ஆவது டெஸ்ட் (மொகாலி) |
| | மார்ச் 18-22- 3ஆவது டெஸ்ட் (மும்பாய்) |
| ★ ஒருநாள் போட்டிகள் | மார்ச் 28 - 1ஆவது ஒருநாள் (டெல்லி) |
| | மார்ச் 31 - 2ஆவது ஒருநாள் (ஹைதராபாத்) |
| | ஏப்ரல் 3 - 3ஆவது ஒருநாள் (கோவா) |
| | ஏப்ரல் 6 - 4ஆவது ஒருநாள் (கொச்சி) |
| | ஏப்ரல் 9 - 5ஆவது ஒருநாள் (கவுகத்தி) |
| | ஏப்ரல் 12 - 6ஆவது ஒருநாள் (ஜாம்ஷெட்சர்) |
| | ஏப்ரல் 15 - 7ஆவது ஒருநாள் (இந்தூர்) |

# சிரேஷ்ட வீரர்கள் இல்லாத போட்டி!




பங்களாதேஷில் போட்டிகளில் ஈடுபடுகின்ற இலங்கை அணியில் மார்வன் அத்தபத்து, சமிந்தவாஸ், சனத் ஜயசூரிய ஆகியோர் இடம் பெறாமைக்குக் காரணம் அவர்களுக்குச் சிறிது ஓய்வு வழங்க வேண்டும் என்பதற்காகவே எனத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே இலங்கை அணியின் தலைவராக மஹேல ஜயவர்தனவும், உப தலைவராகக் குமார் சங்கக்காரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டித் தொடரில் முத்தையா முரளிதரன் ஒரு டெஸ்ட் போட்டியில் மாத்திரமே கலந்து கொள்ளவுள்ளார். முரளிதரன் இத்தொடரில் தனது 100 ஆவது டெஸ்ட் போட்டியை ஆடவுள்ளார்.

இலங்கை அணியின் சார்பாக இதுவரை சனத்ஜயசூரிய மாத்திரமே இவ்வாறு 100 டெஸ்ட் போட்டிகளில் போட்டியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியான பல போட்டிகள் இருப்பதனால், அதற்குத் தயார் படுத்தல் தேவை என்பதற்காகவே அணியின் சிரேஷ்ட வீரர்கள் சிலருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

விக்கெட் காப்பாளரன பிரசன்ன ஜயவர்தன மீண்டும் டெஸ்ட் குழாமில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமைக்குக் காரணம் தற்போதைய விக்கெட் காப்பாளரான சங்கக்காராவுக்குத் தேவையேற்படின் ஓய்வு வழங்குவதற்காகவே எனவும் தெரியவருகின்றது.

# 11 வருடங்களின் பின்னர்

நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டியில் கலந்து கொள்வதற்கென மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூசிலாந்திற்கு வருகை தரவுள்ளது.

பதினொரு வருடங்களின் பின்னரே நியூசிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் கலந்து கொள்வர். இதன்படி 1 ஆவது டெஸ்ட் போட்டி மார்ச் 9 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவண்ணங்கள்
## த.பெ.எண் 2037
## கொழும்பு



எஸ்.தரிந்து, தரம் - 4,
கிங்ஸ்டன் சர்.பாட,
கல்கிஸ்ஸை.




எம்.ஏ.எம்.அஸ்லம்,
தரம் - 12, மபாயா ம.வி,
காத்தான்குடி.



எம்.எம்.பாத்திமா
அஸ்மியா, தரம் - $9^{A}$,
பாத்திமா பாலிஹா ம.வி,
ஓட்டமாவடி.



ந.பா.ஸப்றா ஜெஸ்மின்,
தரம் - 10, தி/அந்தகார்
ம.ம.வித், மூதூர்.




எம்.என்.ஆதில் முஹமட்,
தரம் - $7^{A}$,
அஸ்ஹர் ம.கல்லூரி,
அக்குறணை.



எம்.தமிழ்மலர், தரம் - $9^{A}$,
ப/விவேகானந்தா த.வி,
அட்டாம்பிட்டிய.



எம்.எஸ்.எப்.சிபானியா,
தரம் - 9,
அல்-அக்ஸா மு.வி,
வெலம்பட.





வி.ஜெயவாணி,
தரம் - 7,
பிட்டமறுவ ம.வி,
பிட்டமறுவ.



களுத்துறை 'தாருலியாஜ்' பாலர் பாடசாலையில் அண்மையில் இடம் பெற்ற கலை நிகழ்ச்சியின் போது மாணவர்கள் வரவேற்புப் பாடல் இசைப்பதை இப்புகைப்படத்தில் காணலாம்.

## விஜய் 'விழா உலா'
## த.பெ.எண் 2037
## கொழும்பு



*பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம் பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற சோ.சாஜினி, பிரதம விருந்தினரிடமிருந்து பரிசில் பெறுகிறார்.*

# கழுதை மாமா







பொதி சுமக்கும் கழுதை மாமா
எங்கே போகிறீர்?
பொட்டலத்தை இறக்கி வைக்கத்
துறைக்குப் போகிறேன்.
துள்ளித் திரியும் கழுதையாரே
எங்கே போகிறீர்?
துவைத்த துணியை எடுத்து வரத்
துறைக்குப் போகிறேன்.

வண்ணார் வீட்டுக் கழுதை ராசா
எங்கே போகிறீர்?
வயிறு நிறையப் புசிப்பதற்குக்
காடு போகிறேன்.
உப்பு மூடை சுமந்து கொண்டு
எங்கே போகிறீர்?
கொட்டும் மழையில் நனைந்து கொண்டு
கடைக்குப் போகிறேன்.

பாட்டுப் பாடும் கழுதையண்ணா
எங்கே போகிறீர்?
பழசுகளைப் பொறுக்கித் தின்னப்
பட்டணம் போகிறேன்.
நொண்டிக் கால் கழுதை ஐயா
எங்கே போகிறீர்?
நோ வினைகள் செய்பவரை
உதைக்கப் போகிறேன்!

கலையமுதன்
எம்.சி.எம்.இக்பால்

## 5 குறுக்கெழுத்துப் போட்டி, இல.51

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | னீ | 2 | | 3 | 4 |
| | | | | 5 | |
| 6 ன | | | 7 | | |
| | | 8 ல் | | 9 | 10 |
| | 11 | | 12 | | டி |
| 13 இ | | | | | |

### மேலிருந்து கீழ்

1. வைசூரி நோய் தடுப்பு மருந்தை கண்டுபிடித்தவர்.
2. 'நிக்கலஸ் கொப்பனிகஸ்' இதன் தந்தையாவார்.
3. இதைக் கண்டெடுக்குமளவுக்கு யானையின் கண் பார்வை கூர்மையென்பர்.
4. மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவிப்பது.
7. அதர்மம்-எதிர்ச்சொல்
9. உணவு வகை. 10. சுற்றி வளைத்த பேச்சு.
11. புதராக வளரும் ஒரு வகைத் தாவரம்.

### இடமிருந்து வலம்

1. சுவிற்சர்லாந்தின் கலாசார மத்திய நிலையமாக விளங்கும் நகர்.
3. சிவப்பும் நீலமும் சேர வரும் நிறம்.
5. இந்நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதி மிஷேல் பஷலே என்பவராவார்.
6. மகன் (குழம்பி).
8. முல்லாவின் கதைகள் போன்று இவரது கதைகளும் பிரசித்தமானவை (குழம்பி).
12. பாத்திரத்தின் அடியில் எஞ்சியிருக்கும் திரவம்.
13. ஆடை நெய்யப் பயன்படும் மெல்லிய நூல்.

குறுக்கெழுத்துப் போட்டி -51
"விஜய்" த.பெ.எண். 2037 கொழும்பு

### போட்டி. இல - 49இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஹெ | ய் | ட் | 2 டி | | 3 ழு |
| ட் | | | 4 லா | ய | ம் |
| ரி | | 5 பொ | ன் | | தா |
| க் | | 6 ரு | பெ | ல் | லா |
| | 7 ச | கு | ரா | | ர |
| 8 சோ | கி | | 9 ரே | கை | |

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

ஹரிஸ் வலன்ரைன், தரம் - 4,
புனித ஆசீர்வாதப்பர் கல்., கொட்டாஞ்சேனை.

எஃப். சிஃபாரா, தரம் - 6,
ஸாஹிரா மு.ம.வித்., குருணாகல்.

ஏ.எம்.எல். அக்தார், தரம் - 2[B],
அறபா வித்தியாலயம், ஏறாவூர்.

பெயர் :- ..........................................................

நிரந்தர முகவரி:- ..........................................................

..........................................................

பாடசாலை, தரம், முகவரி :- ..........................................................

..........................................................

..........................................................

நகரம் : .......................... மாவட்டம் : ..........................

## 1

**உச்சரிப்பை அவதானித்துச் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**


| பொருள் | உச்சரிப்பு | | |
|---|---|---|---|
| அ. சமையல் முறை | க்வி(z)ஸீன் | - | Cuveizine, Cvizine, Cuisine |
| ஆ. தானிய வகைகள் | மிலிட் | - | Millet, Milite, Milit. |
| இ. மனோதத்துவவியல் | ஸைகொலொஜி | - | Sycology, Psychology, Psycology. |
| ஈ. நாடு பெயர்ந்து குடியேறுபவர் | மை(g)க்ரன்ட் | - | Migrant, Mygrant, Migrante. |
| உ. ஒற்றைத் தலைவலி | மி(g)க்ரேய்ன் | - | Megraine, Migraine, Migrain |

**ஆங்கிலச் சொல்லுக்குரிய சரியான தமிழ்ச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

| | | |
|---|---|---|
| அ. Newspaper | - | நாழிதழ், நாளிதழ், நாளிதள் |
| ஆ. Blacksmith | - | கொல்லன், கொள்ளன், கொல்ளன் |
| இ. Dry leaf | - | சறுகு, சருகு, ஸருகு. |
| ஈ. Vow | - | சூழுரை, சூளுரை, சூலுரை |
| உ. Bangle | - | வலயல், வளயல், வளையல் |

## கணக்குப் புதிர்

### 3




1. படத்திலுள்ள முக்கோண இலக்கங்கள் எவை?

..........................................................

2. படத்திலுள்ள மொத்த இலக்கங்களின் கூட்டுத்தொகையை இந்து அராபிய இலக்கத்தில் எழுதுக.

..........................................................

3. இங்குள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


..........................................................

## 2 ஒழுங்குபடுத்தி எழுதுக

1. திடீரென "என்னைத் தொடாதே! தொட்டால் உனக்கு ஆபத்து!" என்றொரு குரல் என்னை எச்சரித்தது.
2. அங்கே வெள்ளி நிறத்தில் அழகிய பெட்டி ஒன்று இருந்தது.
3. அன்று மாலை ஒற்றையடிப் பாதையின் ஊடாக தனியே வந்து கொண்டிருந்தேன்.
4. நான் அதைக் கவனிக்காமல் பெட்டியை வெளியே எடுத்து திறந்ததுதான் தாமதம்.
5. அப்போது பாதையோரமாக இருந்த புதருக்குள் வித்தியாசமாக ஏதோ மின்னுவதைக் கண்டேன்.
6. அதைக் கையிலெடுக்க முற்பட்டேன்.
7. பெட்டிக்குள்ளிலிருந்து பெரியதொரு பூதம் உறுமிக் கொண்டு வெளியே வந்தது.
8. புதருக்கு அருகில் சென்றேன்.

## ஒரே மாதிரியான உருக்கள் எத்தனை உள்ளன?

### 4



## அறிவுக்கு விருந்து - 37 விடைகள்

**போட்டி : 01**

- 14 வட்டங்கள் (இடப்பக்கமாகப் பார்த்தால் 7வட்டங்களும் வலப்பக்கமாகப் பார்த்தால் 7 வட்டங்களும் தெரியும்)

**போட்டி : 02**

1. தீர்க்கதரிசி 2. ஜனநாயகம் 3. சிட்டுக்குருவி
4. பம்பரம் 5. கண்காட்சி 6. சச்சரவு

**போட்டி : 03**

- பொப்பி - இத்தாலி
- க்ரிஸாந்திமம் - ஜப்பான்
- ஓகிட் - சிங்கப்பூர்
- செவ்வரத்தை - மலேசியா
- டியூலிப் - ஒல்லாந்து

**போட்டி : 04**

அ) ரூ.35.45 இலாபமாகக் கிடைத்தது.
ஆ) 40 உள்ளன. இ) 140 பென்சில்கள்
ஈ) ரூ.66.50 ஆகும்.




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையிலும் ஒட்டி கீழுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து 2006.03.02ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 40**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 37 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 03 | போட்டி : 04 | போட்டி : 05 (குறு.போட்டி-49) |
|---|---|---|---|---|
| சிவகாமி பரமலிங்கம், தரம் - 7[B], யா/மெய்கண்டான் ம.வித்தி., பண்ணாகம். | எம். எச். எம். ஹபில், தரம் - 7 மடிகே மு.வித்தி., முதுந்துவ. | ஏ. சிறின் சிதாரா, தரம் - 8 அல் மனார் ம.கல்லூ., மருதமுனை | ஆ.மதிவதனன், தரம் - 4[B], கம்பளை இந்துக் கல்லூ., கம்பளை. | எம். என். எம். அஸீம், தரம் - 9[T], புனித சில்வெஸ்டர் கல்., கண்டி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றிலிருந்து..

# சீதாவாக்கை மீதான தாக்குதல்

அத்தியாயம் 29

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அபயன்





1 மாயாதுன்னை மன்னனுக்கெதிராகப் போரிட்டு அவனைத் தோற்கடிப்பதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனப் போர்த்துக்கேயத் தளபதி மிகேல் பெரேரா புவனேகபாகு மன்னனிடம் கூறியபோதும், மன்னன் அதற்கு விருப்பப்படவில்லை. அவ்விதம் மாயாதுன்னை மன்னனைத் தாக்காவிடில் திரும்பவும் மாயாதுன்னை கோட்டே இராச்சியத்தின் மீது படையெடுக்கலாம் என்றும் அந்நேரம் புவனேகபாகு மன்னனுக்குத் தம்மால் எந்த உதவியையும் செய்ய முடியாமல் போய்விடும் எனத் தொடர்ந்தும் போர்த்துக்கேயத் தளபதி கூறி வந்தான்.

2 இறுதியில் புவனேகபாகு மன்னன் சீதாவாக்கை மீது போர் தொடுக்க விருப்பமின்றியே உடன்பட்டான். அதுமட்டுமன்றி மலபார் படைகளைத் தாக்க வேண்டுமென்ற அவாவும் மன்னனிடம் இருந்தமையால் இதுவே நல்ல தருணம் என எண்ணிப் போர்த்துக்கேயப் படையுடன் கோட்டே இராச்சியப் படைகளையும் அனுப்பி வைத்தான்.

3 போர்த்துக்கேய மற்றும் கோட்டேப் படைகள் இணைந்து, சீதாவாக்கை மீது படை நகர்த்திச் சென்றன. செல்லும் வழியில் கணனி கங்கைப் பாலத்தின் மீது காவல் காத்துக் கொண்டிருந்த படைகளும் அவர்களுடன் இணைந்தன. இரு படையணியினரும் சீதாவாக்கைக்குள் உள்ளிட்டனர். இரு புறமும் இருந்த வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். ஆடு மாடுகளையும் அழித்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் அநாதைகளாயினர். பிள்ளைகள் மற்றும் குழந்தைகளையும் கூடத் துன்புறுத்தினர்.

4 அவர்கள் அரச மாளிகையை அண்மித்தபோது அங்கிருந்த துப்பாக்கி ஏந்திய சேனைகள் போர்த்துக்கேயப் படையை எதிர்த்துத் தாக்கக் கோட்டேப் படைகளும் எதிர்த்தாக்குதலை நடாத்தின. அதைத் தொடர்ந்து சீதாவாக்கைப் படைகள் தப்பியோடின. இதனால் பயந்த மாயாதுன்னை மன்னன் தன் மூத்த சகோதரன் கோட்டே அரசன் புவனேகபாகுவை உடனே சந்திக்கத் தூதுவன் ஒருவனை அனுப்பி வைத்தான்.

5 தூதுவன் புவனேகபாகு மன்னனைச் சந்தித்தான். தன்னால் ஏற்பட்ட தவறுகளுக்குத் தன்னை மன்னிக்கும் படியும் புவனேகபாகு மன்னனுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள விரும்புவதாகவும் தூதுவனிடம் மாயாதுன்னை மன்னன் கூறியனுப்பினான். இந்தச் செய்தியைக் கோட்டே மன்னன் மிகேல் பெரேராவிடம் தெரிவித்தபோதும் தளபதி அதற்குச் சம்மதிக்கவில்லை. மாயாதுன்னை மன்னனை அழிப்பதன் மூலம் சகல பிரச்சினைகளையும் தீர்க்கலாம் எனப் போர்த்துக்கேயத் தளபதி நினைத்தான்.

6 ஆனால் கோட்டே மன்னனான புவனேகபாகு தன் சகோதரன் மேலுள்ள பாசத்தால் போரை நிறுத்தும் படியும் மற்றும் தன் சகோதரனின் வேண்டுகோளைக் கவனித்துப் பார்க்கும் படியும் போர்த்துக்கேயத் தளபதியிடம் கேட்டுக் கொண்டான். இதனைச் செவிமடுக்க வேண்டிய நிலைக்குப் போர்த்துக்கேயர் தள்ளப்பட்டனர். மிகேல் பெரேரா தாக்குதலை நிறுத்தியதோடு மாயாதுன்னை மன்னனிடம் பிணை ஒன்றை நிறைவேற்றக் கோரினான்.

7 மாயாதுன்னை மன்னனின் மகன் டிகிரி பண்டாரவைப் பிணையாகப் போர்த்துக்கேயத் தளபதி கேட்டான். அத்துடன் மகனுடன் சேனாதிபதிகள் இருவரையும் தம்முடன் அனுப்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டான். இதனைக் கேட்ட மாயாதுன்னை மன்னன் வேதனையடைந்தான். பின்பு தன் மகனைப் போர்த்துக்கேயப் படையுடன் அனுப்பி வைத்தான். இதனால் மகிழ்ச்சியடைந்த மிகேல் பெரேரா தொடர்ந்து சீதாவாக்கையைத் தாக்குவதை முழுமையாக நிறுத்த வேண்டுமானால் இன்னுமொரு நிபந்தனையொன்றையும் நிறைவேற்ற வேண்டுமென்று கூறினான்.

8 அதாவது மலபார் சேனாதிபதிகள் நான்கு பேர் மற்றும் படைத்தலைவர்கள் ஆறு பேரையும் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டான். இதற்கு மாயாதுன்னை மன்னன் உடன்படவில்லை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு குதிரையின் செருக்கு! 2

- வேணுவாரியத் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Feberuary 22, 2006